OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள் சோதனை செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 11 ஞாயிற்றுக்கிழமை (26 – 12 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 30

# யுத்தச் செய்திகளை மக்களுக்கு மறைக்கவே
# அவசரகால சட்ட விதிகள் மீண்டும் அமுல்!

## சுதந்திர வெகுஜனத் தொடர்பு இயக்கம் ஸ்ரீலங்கா அரசாங்கம் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, டிசம்பர் 26

வடக்கு யுத்தம் ஸ்ரீலங்கா அரசுக்கு பாதகமான வகையில் அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்த விடயத்தில் மக்கள் அரசுக்கு எதிராகப் போராடுவார்கள் என்ற அச்சமும் அரசுக்கு எழுந்திருக்கிறது. எனவே யுத்தச் செய்திகளை மக்களுக்கு மறைக்கும் நோக்குடனேயே அவரசகாலச் சட்ட விதிகளை மீண்டும் அமுல் செய்ய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

— இவ்வாறு கொழும்பிலிருந்து இயங்கும் சுதந்திர வெகுஜன தொடர்பு இயக்கம் குற்றம் சுமத்தியிருக்கிறது.

யுத்தத்தின் உண்மையான நிலைமை குறித்து வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்புகளுக்கு தடை போட்டிருக்கிறது என்றும் —

அரசு பத்திரிகைச் சுதந்திரத்திற்கு விலங்கிட்டிருக்கிறது என்றும் வெகுஜனத் தொடர்பு இயக்கம் மேலும் தெரிவித்திருக்கிறது.

அரச அதிகாரிகளுக்கும் ஜனாதிபதிக்கும் எதிராகா பத்திரிகைகள் மேற்கொள்ளும் விமர்சனங்களுக்கு தடை விதிப்பதற்காக பிரேமதாஸா அரசால் பயன்படுத்தப்பட்ட அவசரகால விதிகள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா ஆட்சிக்கு வந்ததும் நீக்கப்பட்டன. ஆனால் அவற்றைநீக்கி நான்கு மாதங்கள் கழிய முன்னரே மீண்டும் அந்த விதிகள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

இந்த அவசரகால விதிகள் மூலம் மக்களின் கருத்துத் தெரிவிக்கும் உரிமைகள் பறித்தெடுக்கப்பட்டிருப்பதாக எதிரணிகளும் குற்றம் சுமத்தியிருக்கின்றன.

அரசியல் எதிரிகள் ஆயிரக்கணக்கானோரைக் கொலை செய்துள்ளதாக ஐ.தே.க. அரசு மீது குற்றம் சுமத்தி பிரதி பொலிஸ் மா அதிபர் உடுகம் பொல வெளியிட்ட சத்தியக் கடதாசியை பத்திரிகைகள் பிரசுரித்ததை அடுத்து —

பத்திரிகைகளுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் எதிராக அப்போதைய அரசு சட்ட விதிகளை செயற்படுத்திய முறை மறக்க முடியாத தொன்று — என்றும் சுதந்திர வெகுஜனத் தொடர்பு இயக்கம் தெரிவித்திருக்கிறது.

(உ-6)

யாழ். வருவதற்காகக் காத்திருக்கும்
## 3 ஆயிரம் பயணிகள் கிளிநொச்சியில் அவதி

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ். மாவட்டத்துக்கு வருவதற்காக 3 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கிளிநொச்சியில் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து வந்த பயணிகள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் — பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் — அங்கு தங்கியுள்ளதாக அங்கிருந்து நேற்று வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், அங்கு தங்கியுள்ள பயணிகள் இருப்பிட, உணவு வசதிகள் இன்றிக் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குடமுருட்டி ஆறு பெருக்கெடுத்துள்ளதால், கிளி

(6ஆம் பக்கம் பார்க்க)

## பெப்ரவரி மாதத்திலேயே அங்கிலிக்கன் ஆயர் வருவார்

யாழ்ப்பாணம், டிச. 26

அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் வண. கெனத் பெர்னாண்டோ வடக்கிற்கான தமது பயணத்தை பெப்ரவரி மாதம் முதலாம் திகதியே மேற்கொள்ளவிருப்பதாக அங்கிலிக்கன் திருச்சபையின் யாழ் மறை வட்டம் தெரிவித்துள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சபையின் செயற்பாடுகளை பெப்ரவரி முதலாம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை ஆயர் கவனிப்பார்.

6 ஆம் திகதி அங்கிருந்து புறப்படும் அவர் அநுராத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நத்தார் தினத்தன்று மோதல் இல்லை

கொழும்பு, டிச. 26

நத்தார் தினமான நேற்று வடபகுதியில் அரச படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எந்த வித மோதல்களும் இடம் பெறவில்லை என்று பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-8)

## கருத்துச் சுதந்திரம் ஒழிக்கப்பட்டுவிட்டது
### எதிர்க்கட்சிகள் கண்டனம்

கொழும்பு, டிச. 26

ஜனநாயக ரீதியில் கருத்து வெளியிடுவதற்கு மக்களுக்கு இருந்த உரிமை புதிதாகக் கொண்டு வரப்பட்டிருக்கும் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் ஒழிக்கப்பட்டிருப்பதாக லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பற்றி வீரக்கோன் தெரிவித்திருக்கிறார்.

இன்று வடக்கு யுத்தமும் அதற்கு மேலதிகமாக பெரும் அரசியல் பிரச்சினைகள் பலவும் உள்ளன. இந்நிலையில் அரசுக்கு எதிரான அபிப்பிராயங்கள் வெளியிடுவதை இலகுவில் நிறுத்துவதற்குப் புதிய அவசரகால விதிகள் பயன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா - அரசு பிணக்கு முற்றுகிறது

கொழும்பு, டிச. 26

இ.தொ.கா. தலைவர் தொண்டமானுடன் இணக்கத்தை ஏற்படுத்த அரசுத் தரப்பினர்எடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்ற நிலையில் —

தொண்டமானுக்கு எதிராகக் கடும் போக்கைக் கடைப்பிடிப்பதற்கு அரசுத் தரப்பு தீர்மானித்திருக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம் —

மத்திய மாகாண சபையில் அங்கம்வகிக்கும் தமது கட்சி உறுப்பினர்கள் ஏழு பேரைத் தமக்கு எதிராகத் திருப்பியதால் அரசு மீது தொண்டமான் கடும் சீற்றம் கொண்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

# நத்தார் வழிபாட்டு வேளையில் நள்ளிரவில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிச. 26

வைகுந்த ஏகாதசி— சொர்க்க வாசல் தரிசனம், நத்தார் தின நள்ளிரவு ஆராதனை ஆகிய சமய வழிபாட்டு நிகழ்வுகள் நடக்கும் வேளையில்—

நேற்று முன்தினம் நள்ளிரவில் பலாலி, மண்டைதீவு, காரைநகர் இராணுவ முகாம்களிலிருந்து மக்கள் குடியிருப்புகளை நோக்கி பலத்த ஷெல் வீச்சுகள் நடத்தப்பட்டன

வெள்ளி இரவு 11மணிக்குப் பின்னர் அதிகாலை 1 மணி வரை விட்டுவிட்டுப் பல தடவைகள் ஷெல் வீச்சுகள் நடத்தப்பட்டன.

பலாலியில் இருந்து ஏழாலை, சுன்னாகம் பகுதிகளை நோக்கிப் பலத்த ஷெல் வீச்சுகள் நடத்தப்பட்டன. மழை பெய்து கொண்டிருந்ததால், அங்கு விழுந்து வெடித்த பீரங்கி (ஆட்லறி) ஷெல்களின் சத்தம் யாழ். நகரப் பகுதி வரை பயங்கரமாகக் கேட்டது.

இதேவேளை மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்தும் வியாழன் இரவு 11 மணியிலிருந்து அராலி தெற்குப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது பீரங்கி ஷெல்கள் ஏவப்பட்டன.

இப்பகுதியில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவால் அமைக்கப்பட்ட குடிசைகளில் தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள்.

ஷெல்கள் இரண்டு அராலி தெற்கில் உள்ள இரு வீடுகளில் விழுந்து வெடித்தன. தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

வெள்ளி இரவு பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் வைகுந்த ஏகாதசி (சொர்க்கவாசல்) திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, காரைநகர் இராணுவ முகாமில் இருந்து ஆலயப் பகுதியை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன. பொன்னாலை, நெல்வி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 6. 200 குடும்பங்கள் இடம் பெயர்வு

தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரத்து 200 க்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்கள் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தற்சமயம் தங்கியுள்ளனர் என்றும் —

இவர்களுக்கான உணவு, மற்றும் உடுப்புக்கள் எனபவற்றை அரச சார்பற்ற நிறுவனங்களும், பொது அமைப்புக்களும் வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது

(உ-5)

## இன்றும் மழை

வடக்கு, கிழக்கு வட- மேல் மாகாணங்களில் இன்று இடிமுழக்கத்துடன் கூடிய மழை பெய்யும் என்று வளிமண்டல பகுதி அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண கரையோரப் பகுதியில் இன்று கடும் மழை பெய்வதுடன், கடற் கொந்தளிப்பும் காணப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மலை நாட்டில் விக்ரோரியா, டிக்கோயா பகுதிகளில் நேற்று கூடுதலான மழை பெய்ததாகவும்—

கண்டிப் பகுதியில் மழையாலும், மண்சரிவாலும் பல வீடுகள் சேதமடைந்ததுடன் போக்குவரத்தும் தடைப் பட்டுள்ளது என்றும்—

இலங்கை வானொலி அறிவித்தது. (உ-3)

## பாதுகாப்பு வலயத்தில் ஷெல்; நித்திரையில் இருந்த சிறுமி பலி!
### நேற்று நள்ளிரவு பயங்கரம்

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயப் பகுதியில் நேற்றிரவு 10 மணியளவில் விழுந்து வெடித்த இரண்டு ஷெல்களினால் நித்திரையில் இருந்த ஆறு வயதுச் சிறுமி ஒருத்தி பலியானாள். இளைஞர் ஒருவர் காயமுற்றார்.

மண்டைதீவில் இருந்து ஏவப்பட்டதாகக் கருதப்படும் இந்த ஷெல்கள் மூன்றாம் குறுக்குத் தெருப் பகுதியில் விழுந்து வெடித்ததில் வீடு ஒன்றும் பலத்த சேதமடைந்தது.

சேதமுற்ற வீட்டில் அச்சமயம் ஆட்கள் எவரும் இருக்கவில்லை.

முன் வீட்டில் நித்திரையில் இருந்த சிவகுமாரன் தனுஷியா (வயது 6) என்ற சிறுமி தலையில் படுகாயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் சிறுமி உயிரிழந்தாள்.

இச்சிறுமியின் குடும்பத்தவர்கள் வேலணையில் இருந்து இடம்பெயர்ந்து மூன்றாம் குறுக்குத் தெருப் பகுதியில் வசித்து வந்தனர்.

ஆரோக்கியநாதர் டல்ஜித் துறா (ஜெமின்) என்ற 23 வயது இளைஞர் இச்சம்பவத்தில் காயமடைந்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவரை அனுமதிக்கும் அதிகாரம் பல்கலைக்கழகங்களுக்கு வழங்குக
### மூதவை கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 26

"ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சையின் முடிவுகளின் படி பல்கலைக் கழகங்களுக்கு தேவையான மாணவர்களை தெரிவு செய்யும் அதிகாரத்தை அந்தந்தப் பல்கலைக் கழகங்களுக்கு வழங்க வேண்டும்"

யாழ். பல்கலைக் கழக மூதவை ஜனாதிபதியை இவ்வாறு கோரியுள்ளது.

யாழ். பல்கலைக் கழக மூதவை கடந்த வாரம் கூடிய சமயம், தற்போதைய பல்கலைக் கழக அனுமதி முறையால் யாழ் பல்கலைக் கழகம் எதிர் நோக்கியுள்ள நெருக்கடிகள் குறித்து ஆராயப்பட்டது. அதன் பின்னர் தயாரிக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதி உயர் கல்வி அமைச்சர் ஆகியோருக்கும் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவுக்கும் அனுப்பப்பட்டுள்ள இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ இம்முறை அமுல் செய்யப்பட்ட அனுமதி முறையால் வடபகுதி மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது மட்டுமல்லாமல், யாழ். பல்கலைக் கழகத்துக்கும் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகத்தின் வளங்கள் வீணாகும் நிலை உருவாகியுள்ளது. இதனால் நாட்டுக்கும் பேரிழப்பு.

எனவே கடந்த ... பரீட்சை முடிவுகளை ...

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி முரவி



அப்ப... உவர் உத்தமர் தான் [illegible]

# ஊவா மாகாண அரசு மீதும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, டிச. 26

ஊவா மாகாணத்தில் ஆட்சியில் இருக்கும் முதலமைச்சர் பேர்சி சமரவீர தலைமையிலான ஐ.தே.க. அரசுக்கு எதிராக அடுத்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.தே.காவுக்கும், அமைச்சர் தொண்டமானுக்கும் இடையில் மோதல் நிலை உருவானதை அடுத்தே ஊவா மாகாண முதல்வருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

34 பேரைக் கொண்ட ஊவா மாகாண சபையில் ஐ தே.க. பட்டியலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 20 பேர் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் மூவர் இ. தொ. காவைச் சேர்ந்தவர்கள். எஞ்சிய ஐ தே.க. உறுப்பினர்கள் 17 பேரில் ஒருவர் சபையின் தலைவராவர்.

மாகாண சபையில் ஸ்ரீ.ல. சு. தலைமையிலான பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் 10 பேரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த 4 பேரும் இடம் பெற்றுள்ளனர்.

இந்தப் 14 பேருடன் இ.தொ.கா. உறுப்பினர்கள் மூவரும் சேர்ந்து கொண்டால் எதிரணியினரின் பலம் 17 ஆக அதிகரிக்கும்.

அப்படியான நிலையில் ஐ.தே. கவிற்கு சபைத்தலைவரின் வாக்கைத்தவிர்த்துப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# கடத்தப்பட்ட இ.தொ. காவினர் உடன் ஜனாதிபதி முன் ஆஜர்

கொழும்பு, டிச. 26

கடத்திச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் மத்திய மாகாணசபையைச் சேர்ந்த ஏழு இ.தொ.கா. உறுப்பினர்களும், தென் மாகாணசபையைச் சேர்ந்த எதிரணி உறுப்பினர் ஒருவரும் கடத்தப்பட்டதும் உடனடியாக ஜனாதிபதியிடம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களுக்கு ஜனாதிபதி விஜேதுங்கா சில வாக்குறுதிகளை அளித்ததாலேயே அவர்கள் தமது நிலையை மாற்றிக் கொண்டு அரசுக்கு சார்பாக செயற்பட முனைந்துள்ளனர்.

இத்திடுக்கிடும் தகவல்களை 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் வெளியிட்டுள்ளார்.

மாகாணசபைகளை ஆளும் கட்சியின் அதிகாரத்துக்கு உட்படுத்தும் நோக்குடனும்—

தமக்கு பாதகமான மாகாணசபைகளை ஒழிக்கும் நோக்குடனுமே — ஆளும் கட்சியினர் இவ்விதமாக நடந்து கொள்கின்றனர் என்றும் அவர் குற்றச்சாட்டினார்.

தென்னிலங்கையில் உள்ள மாகாணசபைகளில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடத்தப்பட்டவர்கள் நேரடியாக ஜனாதிபதியிடம் கூட்டிச் செல்லப்பட்டதால் அவர்களை தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சியில் பொலீஸார் ஈடுபடவில்லை.

மத்திய மாகாண சபையில் எழுந்துள்ள சிக்கலை எதிர்கொண்டு, தான் வெற்றியடைய முடியாத நிலையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அரசமைப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி
# எதிரணி மாகாண சபைகளை பொறுப்பேற்க அரசு திட்டம்!

கொழும்பு, டிச. 26

எதிர்க்கட்சிகள் ஆட்சி நடத்தும் மூன்று மாகாண சபைகளை ஒழிக்கவும்—

வேறு மாகாண சபைகள் எதிரணி வசம் வீழ்வதைத் தடுக்கவும் அரசு திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

எதிர்வரும் சனிக்கிழமை பிறக்கும் வருடம் தேர்தல் ஆண்டாக இருக்கிறது.

இந்நிலையில் எதிர்க்கட்சிகள் மாகாண சபை வளங்களை தேர்தலில் அரசுக்கு எதிராகப் பயன்படுத்துவதை அனுமதிக்கக்கூடாது என்பதில் அரசு கவனமாக இருக்கிறது.

இதனால் எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் மாகாண சபைகளை ஒழிப்பதே அரசின் நோக்கமாக உள்ளது.

இந்த மாகாண சபைகளில் நிர்வாகம் ஸ்தம்பிதமடையும் நிலையை ஏற்படுத்தி, அவைகளின் ஆட்சியைப் பொறுப்பேற்பதே அரசின் முக்கிய தந்திரோபாயமாக இருப்பதாகத் தென்படுகிறது.

அரசமைப்பின் 154 ஆவது பிரிவின்படி—

மாகாண சபைகளின் நிர்வாகம் ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்படும்போது விசேட பிரகடனத்தின் மூலம்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை
# பரஸ்பர சகாயநிதி சங்கம்
வரையறுக்கப்பட்டது
வட்டுக்கோட்டை

## 35ஆவது ஆண்டு பொதுக் கூட்டம்

28 - 12 - 93 செவ்வாய்க்கிழமை
(பூரணை நாள்) காலை 9 - 30 மணி

மேற்படி சங்கத்தின் 35ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 28-12-93 செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு சித்தன்கேணியில் அமைந்துள்ள வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. கே. எஸ். அருணானந்தர் தலைமையில் நடைபெறும். தனித்தனி அறிவித்தல்களும் அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அங்கத்தவர் நலன் கருதி இவ்வறிவித்தலையும் தங்களது மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

நன்றி

சங்கச் சேவையில்

செ இ ஆனந்தராசா — பொதுமுகாமையாளர்
த மு. கதிர்காமநாதன் — கௌரவ செயலாளர்

(சி/6820)

## ஆலயங்களில்

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் திருவெம்பாவை தேர்த்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் புதன்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். (த)

★ ★ ★

சித்தங்கேணி ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலய புதிய தேர் வெள்ளோட்ட விழா இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். புதிய தேரில் சுவாமி எழுந்தருளும் காட்சி நாளை திங்கட்கிழமை நடைபெறும். (த-28)

## புதிய சந்தை

சண்டிலிப்பாய், டிச. 26

வலி தென் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மானிப்பாய் நவீன சந்தையில் 75 ஆயிரம் ரூபா செலவில் புதிய சந்தைக் கொட்டகை யொன்றை நிறுவியுள்ளது.

மழை காலங்களில் இங்கு மரக்கறி விற்பனை செய்பவர்களும் பாவனையாளர்களும் கட்டட வசதியின்மை காரணமாக பெரும் சிரமங்களை அனுபவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (த-185)

# கப்டன் என். சோமசுந்தரம் மணிவிழா நிகழ்ச்சிகள்

இடம் :- யாழ். இந்துக் கல்லூரி
காலம் :- 26 - 12 - 1993 ஞாயிற்றுக்கிழமை

| | | |
|---|---|---|
| பிற்பகல் | 2.00 மணி:- | காட்சி உதைபந்தாட்டம்<br>ஜொலிஸ்ரார்ஸ் வி. க எதிர்<br>பொற்பதி ஐக்கிய வி. க.<br>( யாழ். இந்து மைதானத்தில் ) |
| மாலை | 4.00 மணி:- | மணிவிழா நாயகரை அவரது இல்லத்திலிருந்து கல்லூரி வீதி, கஸ்தூரியார் வீதி, அரசடி வீதி, காங்கேசன்துறை வீதி, கல்லூரி வீதி வழியாக விழா நடைபெறும் குமாரசுவாமி மண்டபத்திற்கு அழைத்து வருதல் |
| ,, | 4.30 மணி:- | மங்கள இசை<br>தவில் மேதை சின்னராசாவின் புதல்வர்கள்<br>ரவி - சுதா குழுவினர் |
| ,, | 5.30 மணி:- | தேவாரம் |
| ,, | 5.35 மணி:- | அமைதி வணக்கம் |
| ,, | 5.37 மணி:- | வரவேற்புரை<br>சட்டத்தரணி பா. தவபாலன்<br>( செயலர், யாழ். இந்து பழைய மாணவர் சங்கம் ) |
| ,, | 5.45 மணி:- | தலைமையுரை<br>திரு. சுந்தரம் டிவகலாலா<br>( தலைவர், மணிவிழாக்குழு. ) |
| ,, | 5.55 மணி:- | வாழ்த்துரை<br>தவத்திரு சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்<br>( நல்லை ஆதீன முதல்வர் )<br>வண. பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார்<br>( முன்னாள் அதிபர், சென். பத்றிக்ஸ் கல்லூரி ) |
| ,, | 6.15 மணி:- | நயப்புரை<br>திரு. வெ. இளங்குமரன்<br>( பொறுப்பாளர், தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகம் )<br>திரு. இ. ஈசுவரதாசன்<br>( ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி )<br>செல்வன் ஸ்ரீ. பிரசாந்தன்<br>( சிரேஷ்ட மாணவ முதல்வன், யாழ். இந்துக் கல்லூரி )<br>கலாநிதி கா. குகபாலன்<br>( சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம் )<br>திரு. அ. தங்கேஸ்வரன்<br>( முகாமையாளர், இலங்கை வங்கி )<br>திரு. இ மகேந்திரன்<br>( அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி )<br>டாக்டர் து. வி. ஜெயகுலராஜா<br>( தலைவர், யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் )<br>திரு. க. சிவராமலிங்கம்<br>( முன்னாள் பிரதி அதிபர், யாழ். இந்துக் கல்லூரி )<br>திரு. சி. வேலாயுதம்<br>( பிரதிக் கல்விப்பணிப்பாளர் )<br>திரு. த. அருணகிரிராஜா<br>( உதவிக் கல்விப் பணிப்பாளர் - உடற்கல்வி )<br>திரு. இ. ஜெயராஜ்<br>( அமைப்பாளர், அகில இலங்கைக் கம்பன் கழகம் ) |
| ,, | 7.30 மணி:- | மலர் வெளியீடு<br>திரு. அ. பஞ்சலிங்கம்<br>( அதிபர், யாழ். இந்துக் கல்லூரி ) |
| ,, | 7.45 மணி:- | விழா நாயகர் உரை |
| ,, | 8.00 மணி:- | நன்றியுரை<br>திரு. க. ஓங்காரமூர்த்தி<br>( சிரேஷ்ட போதனாசிரியர், தொலைக்கல்வி நிலையம், வேலணை ) |
| ,, | 8.15 மணி:- | கல்லூரிக்கீதம் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். —மணிவிழாக் குழு.

# விற்பனைக்குண்டு

நம்பகரமான அடை முட்டை வேண்டுமா?

அடை வைப்பதற்கேற்ற

- வான் கோழி
- பெண்டம்
- பாமாஸ்
- சிவிக்கி
- காப்பிலி
- தாரா

ஆகியவற்றின் முட்டைகள் விற்பனைக்கு உண்டு

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

முதன்மைச் செயலகம்,
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
தாவடி.

[சி-6767]

அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினால் நடத்தப்படும்

## இலக்கிய, ஓவியப் போட்டிகள்

1994-03-08இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப் போட்டிகளை நடத்த விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்த வகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்.

போட்டிக்கான விதிமுறைகள்:

★ படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்.

★ கவிதைகள் முப்பத்தைந்து வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்கவேண்டும். ஓவியங்கள், போட்டியாளர்கள் விரும்பும் அளவில் வரையப்படலாம்.

★ போட்டியாளரின் சொந்தப் பெயர், முகவரி, வயது என்பன தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு, படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

★ கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், ''அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கிய, ஓவியப் போட்டிக்கான படைப்புக்கள்'' என்று குறிப்பிடப்பட வேண்டும்.

★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

★ போட்டி முடிவு திகதி: **1994 — 01 — 20**

★ படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**சுதந்திரப் பறவைகள்**
வெளியீட்டுப் பிரிவு,
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு,
கோண்டாவில்.

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்குமுகமாக நடத்தப்படும் இவ் இலக்கிய ஓவியப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பெண்களையும் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புக் கேட்டுக்கொள்கின்றது.

— விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு.

(சி-6687)

## சாதனை! சாதனை!! சாதனை!!!

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்ற வெற்றி வேட்கைக் கூற்றுப் படி

## யா/திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையில்

**1993** இன் ஆண்டு **5** புலமைப் பரிசில் பரீட்சையில் **13** மாணவர்கள் சித்தி அடைந்து சாதனை படைத்துள்ளனர்.

விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | செல்வன் விவேகானந்தன் பிரதீபன் | — 183 |
| 2. | செல்வன் சிதம்பரநாதன் செந்தூரன் | — 179 |
| 3. | செல்வி கிரிஷாந்தினி இரங்கநாதன் | — 176 |
| 4. | செல்வன் ஸ்ரீதரன் திவாகரன் | — 172 |
| 5. | செல்வி பத்மினி அம்பலவாணர் | — 166 |
| 6. | செல்வன் நவரெத்தினம் மாதவன் | — 164 |
| 7. | செல்வி தயாரதி தர்மராசா | — 159 |
| 8. | செல்வன் பஞ்சாட்சரம் திருபரங்கன் | — 151 |
| 9. | செல்வி கவிதா முத்துக்குமாரு | — 149 |
| 10. | செல்வன் விஜயகுமார் சுதர்சனன் | — 146 |
| 11. | செல்வன் பத்மசோதிநாதன் ஜெயதர்சன் | — 141 |
| 12. | செல்வன் வீரபத்திரன் கேதீஸ்வரன் | — 140 |
| 13. | செல்வி கவிதாரிணி தங்கராசா | — 136 |

இச்சாதனைக்கு வழி அமைத்து உறுதுணையாயிருந்த நல்லாசிரியர் விருதுபெற்ற திரு. த. மகேஸ்வரனுக்கும், அதிபருக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இம் மாணவச் செல்வங்கள் உயர் கல்வி கற்றுச் சாதனைகள் பல படைத்துச் சான்றோர்களாக வாழ வாழ்த்துகின்றோம்.

- பெற்றோர்

(28608)

நீதியாய் நிமிர்ந்த வாழ்வு

## 31ஆம் நாள் நினைவுகள்

## அமரர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி

(அச்சுவேலி, மலாயன் பென்சனர்)



பிறப்பு:
**10 — 11 — 1903**

நிறைவு:
**26 — 11 — 1993**

நீதியாய் நிமிர்ந்த வாழ்வை
நிலையாய் எழுதிச் சென்றீர்
ஐயா!
நித்தம் உங்கள்
நினைவைப்-
போற்றுகின்றோம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இன்று பகல் 11 மணியளவில் எங்கள் கந்தர்மடம் இல்லத்தில் நிகழும் சடங்குகளில் கலந்திட எங்கள் உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகள்: மகேஸ்வரி பாலகிருஷ்ணன்,
மருமகன்: நா. பாலகிருஷ்ணன்.

பழம் றோட்,
கந்தர்மடம்.

(28590)

## 45-ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



மண்ணின் மைந்தனாய்
**13 — 11 — 1993**

# 2-ம் லெப். சிவகுமாரன்

## (குழந்தைவேலு சத்தியேந்திரா)

எமது பிள்ளையாய்: 29-12-1975
வேங்கையின் மைந்தனாய்: 18-01-1992

புலியாகி புயலாகி பூநகரி சென்று
பூகம்பமாய் நின்று களமாடி வென்று
காவிய நாயகனான எமது அன்புச் செல்வன்
சத்தியேந்திரவையும்
(2ஆம் லெப் சிவகுமாரன்)
ஏனைய வீரவேங்கைகளையும் இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

எமது அன்புச் செல்வம் மாவீரனான செய்தி அறிந்து எமது இல்லம் வந்து எம் துயரில் பங்கு கொண்ட உற்றார்கள், உறவினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவருக்கும், கடிதங்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் வேறு பல வழிகளில் எமக்கு உதவி அளித்த அன்பர்களுக்கும், எம் இளவலின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்தவர்களுக்கும், பத்திரிகைகள் மூலமாக கண்ணீர் அஞ்சலி செய்த அன்பு நெஞ்சங்களுக்கும், பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்திய யாழ். மத்திய கல்லூரி சமூகத்தினருக்கும், புதிய உயர் கல்லூரி சமூகத்தினருக்கும், தும்பளை நெல்லையாண்டான் வெளியீட்டுக் கழகத்தினருக்கும் எங்கள் இதயம் நெகிழ்ந்த நன்றியை சிரந்தாழ்த்தி தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (27-12-1993) திங்கட்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 45ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை: திரு. நாகலிங்கம் குழந்தைவேலு
(சமூகநலச் சேவைத் திணைக்களத் தலைமைப்பீட பெரும்பாக அலுவலரும் - தமிழ் விரிவுரையாளரும்),

தாய்: திருமதி விக்னேஸ்வரி குழந்தைவேலு,
(ஆசிரியர்: பெரியபுலம் மகா வித்தியாலயம்),

அண்ணன்: செல்வன் குழந்தைவேலு - சரத்சந்திரா
(யாழ். மத்திய கல்லூரி),

தங்கை: செல்வி சமுத்திரிக்கா குழந்தைவேலு
(உடுவில் மகளிர் கல்லூரி),

68/2, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

"வாழ்வில் நேசித்த நாம்
மரணத்திலும் நேசிப்போம்"


[சி-6770]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்துக் கல்லூரி பிரதி அதிபர்
# கப்டன் என். சோமசுந்தரம் மணி விழா மலர்

26 - 12 - 1993

## மணிவிழா நாயகர்



கப்டன் என் சோமசுந்தரம்

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்:- 1960 முதல் 1964 வரை
1972 முதல் 1986 வரை

யாழ். இந்துக் கல்லூரி பிரதி அதிபர்:- 1986 முதல் 1993 வரை

## இந்துவின் சோமு

கிட்டத்தட்ட கடந்த முப்பது ஆண்டுகளாக சோமுவின் கைவண்ணம் காணாத எந்த நிகழ்வும் இந்துவில் நிகழவில்லை என்று கூறினால் அது மிகையாகாது.

யாழ். இந்துவின் சரித்திரத்தை முழுமையாக அறிந்த ஒரு சிலரில் சோமுவும் ஒருவர். இந்துவின் நூறாண்டு சரித்திரத்தில் கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகள் அவர் நேரடியாகத் தொடர்பு கொண்டவர். இந்துவின் நன்மை, தீமைகளில் எல்லாம் அவரின் பங்களிப்பு உண்டு. அதனால் என் சோமுவை (எம் சோமுவை) இந்துவின் சோமு என்றழைத்தால் அது மிகையாகாது.

**க. சி. குகதாசன்,**
முன்னாள் அதிபர், யாழ். இந்துக்கல்லூரி.

## கள்ளம் கபடமற்ற மனிதர்

பார்த்தால் சாதுவாக இருக்கும் கப்டன் சோமசுந்தரம் எமது பாடசாலையைப் பற்றி யாராவது தவறாகப் பேசுவதைக் கேட்டுவிட்டால் பாயும் புலிபோலச் சீறுவார். பாடசாலக்கு — அதிபருக்கு — நிர்வாகத்துக்கு எதிராகக் கிளப்பப்படும் கூற்றுகளுக்கு சரியான பதிலடி கொடுக்காமல் ஓயமாட்டார்.

எந்தப் பிரச்சினையானாலும் நேருக்கு நேர் பேசித் தீர்க்காவிட்டால் அவருக்கு நிம்மதி வராது. கள்ளம் கபடமற்ற உள்ளம் கொண்ட நல்ல மனிதர் சோமு.

**க. பூபாலசிங்கம்,**
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சபை,
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யாழ். இந்துக் கல்லூரி.

## இனமானம் மிக்கவர்

இந்துக் கல்லூரியில் சாதாரண கடேற்றாக, உதவி சார்ஜண்டாக, சார்ஜண்டாக, கொம்பனி குவாட்டர் மாஸ்ரர் சார்ஜண்டாக, கொம்பனி சார்ஜண்ட் மேஜராக பிரகாசித்து, சாதனை புரிந்த எங்கள் சோமர் பின்னர், பழைய மாணவனாக வந்த பின்னர் இரண்டாவது லெப்டினன்ட்டாக, லெப்டினன்ட்டாக, கப்டனாக தரமுயர்ந்தார். இதற்கு மேலும் மேஜராக, லெப்டினன்ட் கேணலாக, கேணலாக, பிரிகேடியராக உயருவதற்கு தரமும், திறமையும், வயதும், ஆளுமையும் அவருக்கு இருந்தன. ஆனால் இனத்தின் விடுதலைப் போர் ஆரம்பமானதை அடுத்து, தனது பதவி உயர்வுகளை விட இனமானமே பெரிது என அவர் உணர்ந்ததால் பதவி மற்றும் தரம் உயர்வுகளை நாடாமல், இராணுவ சேவையை அவர் தூக்கி எறிந்தார்.

**சட்டத்தரணி பா. தவபாலன்,**
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக் கல்லூரி.

## விளையாட்டில் விண்ணன்

விளையாட்டுத் துறையின் முக்கிய மூலக்கூறுகள் மூன்று. விளையாடுதல், மத்தியஸ்தம் வகித்தல், நிர்வகித்தல் அல்லது ஒழுங்குபடுத்தல்.

இத்துறைசார் மூன்றிலும் கப்டன் சோமு ஒரு சாதனையாளன். இவற்றில்தான் விண்ணனாகத் திகழ்ந்தது மாத்திரமல்ல மற்றவர்களுக்குத் தலைமைதாங்கி வழிகாட்டியாகவும் விளங்கியவன்; தனக்கென ஒரு பாணியை அமைத்தவன்.

யாழ். மாவட்டத்தில் மாத்திரமல்ல தேசிய மட்டத்திலும் விளையாட்டுத்துறையில் ஒரு வெளிச்சமான வெள்ளியிவன். உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கெட், ஹொக்கி, கூடைப்பந்து, மெய்வல்லுநர் நிகழ்வுகள்... இவ்வாறு எல்லாவற்றிலும் எங்கும் சோமுவை— அவனது ஆளுமையை— நான் பார்த்து வியந்துள்ளேன். அவனது ஈடுபாடுகள், ஆலோசனைகள், கட்டளைகள் தனித்துவமானவை; அதில் அனுபவ முதிர்ச்சி தனியாகத் தெரியும்.

**த. அருணகிரிராஜா,**
உதவிக் கல்விப் பணிப்பாளர்—உடற்கல்வி.

## விசுவாசம் மிக்க ஆசிரியர்

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றிய கப்டன் சோமசுந்தரம் அதன் மூலம் யாழ் பாடசாலைகளின் உதைபந்தாட்டம் மற்றும் மெய்வல்லுநர் துறை விருத்திக்கு பெரும் பணியாற்றியவர்.

மிகவும் விசுவாசமுள்ள — திறமையான கடுமையாகப் பணியாற்றக் கூடிய ஓர் ஆசிரியரை யாழ். இந்துக் கல்லூரி தனது சேவையிருந்து இழக்கிறது. சோமசுந்தரம் ஓய்வு பெறுவதில் ஏற்படும் வெற்றிடத்தை கல்லூரி நிரப்பிக் கொள்வது மிகக் கடினமானதாக இருக்கும்.

நேரில் பார்க்கையில் — பழகுகையில் — சோமா மென்மையானவர் ; அமைதியானவர் ஆனால் சூழ்நிலை தேவைப்படுத்தினால் தாம் இரும்பு மனிதராவும் இறுக்கமாக நிற்கக் கூடியவர் என்பதை அவர் சில சந்தர்ப்பங்களில் நிரூபித்துள்ளார்.

**ரி. கே. வில்வராஜா,**
முன்னாள் செயலாளர்,
யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்.

## ஆசிரிய விற்பன்னர் சோமசுந்தரம்

யாழ். இந்து கண்ட ஆசிரிய விற்பன்னர்களுள் கப்டன் சோமசுந்தரமும் ஒருவர்.

கல்லூரியின் விளையாட்டுத்துறை மற்றும் சாரணீயம், பாண்ட் குழு படைபயில் குழு ஆகிய பல்வேறு துறைகளில் அவர் பொறுப்பாசிரியராக இருந்த காலத்தில் யாழ். இந்து தேசிய மட்டத்தில் பல விருதுகளைப் பெற்றுள்ளது. எமது விளையாட்டு வீரர்கள் டலர் தேசிய மட்டத்தில் பங்குபற்றி இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிநாடுகளில் விளையாடியுள்ளனர்.

கல்லூரிக்கு அப்பாலும் மாவட்டத்தில் பல்துறைசார் விளையாட்டுக்கள் விருத்தியடைவதற்கு அவர் உழைத்துள்ளார்.

கப்டன் சோமசுந்தரம் அவர்கள் இம் மாவட்டத்தின் விளையாட்டுத்துறையில் நாட்டப்பட்ட வாழைமரம் ஆவார். அந்த வாழைமரம் வாழையடி வாழையாக வளரும்.

**சுந்தரம் டிவகலாலா,**
தலைவர், மணிவிழாக் குழு.

## கல்லூரிக்காகவே உழைத்தவர்

தனது கல்லூரி வளரவேண்டும்; புகழ் பெற வேண்டும்; முதனிலை வகிக்கவேண்டும்; அதன் மூலம் இங்கு கற்கும், கற்ற மாணவர்கள் பெருமையும் முன்னேற்றமும் அடையவேண்டும் என்ற இலட்சியங்களைக் கொண்டு செயல்பட்டவர் கப்டன் சோமசுந்தரம் அவர்கள்.

ஒரு பாடசாலையை உள்ளுணர்வுடன் நேசிப்பவன், அதன் முன்னேற்றத்தில் இடைவிடா அக்கறையுள்ளவன், அங்குள்ள மாணவர்களிடம் அன்பும், அவர்கள் முன்னேற்றத்தில் விருப்பமுள்ள ஒருவன் தன் பாடசாலையின் சூழலிலேயே தனது இருபத்துநான்கு மணி நேரத்தையும் செலவிடுவதை ஓர் இன்பகரமான பொழுதாகவே உணர்வான். இந்த உணர்வினை அனுபவித்துப் பெறலாமே தவிர, இவ்வியல்பு அற்றவர்களுக்கும் அதாவது போலியாகவும், பதவிக்காகவும் அக்கறையுள்ளவர்போல் காண்பிப்பவர்களுக்கும் பிறருக்கும் அதனை கூறி விளங்கவைக்க முடியாது.

இவ்வாறு உணர்ச்சிபூர்வமாக தனது கல்லூரியுடன் தன்னை முப்பத்திரண்டு வருடங்களாக ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் இணைத்து தன் வாழ்க்கைப் பொழுதை செலவிட்டவர் அவர். இத்தகையவர்களைக் காணல் அரிதிலும் அரிது.

**அ. பஞ்சலிங்கம்,**
அதிபர், யாழ். இந்துக் கல்லூரி.

## இந்துவின் சிறந்த ஓட்ட வீரர்

சோமா தன் இளமைக் காலத்தில் சிறந்த ஓட்ட வீரராக விளங்கியவர். டல குறுந்தூர ஓட்டங்கள் பலவற்றில் சாதனைகளை நிலை நாட்டியவர். அவர் ஓடும் பாணி— முறை— ரசிப்பதற்கு ஆர்வம் ஊட்டுவதாக இருக்கும்

யாழ். இந்துக் கல்லூரி என்ற கப்பலை பல சூறாவளிகள், புயல்கள், கடுங்காற்றுகள் ஆகியவற்றுக்கு ஊடாக திறட்படச் செலுத்தியவர் அவர்.

**ரி. ஸ்ரீ விசாகராஜா,**
விளையாட்டுப் பொறுப்பாசிரியர்,
யாழ். இந்துக் கல்லூரி.

## அவர் ஒரு கலாநிதி

விளையாட்டுத்துறை நிர்வாகம் என்ற துறையிலே கப்டன் சோமசுந்தரம் தன்னிகரற்று விளங்குகின்றார். திட்டமிடுதல், ஒழுங்குபடுத்தல், செயற்படுதல் என்பவற்றில் அவரது போக்கு தனிப் பாணியாகும். பயிற்சியாளன், நடுவர், தொடக்குநர் என்ற பல்வேறு துறைகளில் மிகுந்த ஆற்றலும் அனுபவமும் கொண்டவர் சோமசுந்தரம். அமெரிக்காவாக இருந்திருந்தால் இவர் சுலபமாக விளையாட்டுத்துறையில் ''கலாநிதிப்பட்டம்'' பெற்றிருப்பார். ஏன்? இப்பொழுது கூட நாமே இவரைக் கௌரவிக்கலாம்; கட்டாயம் கௌரவிக்க வேண்டும்.

**இ. மகேந்திரன்,**
அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.

## வரலாற்றில் மைல் கல்

சேவைக்கு இலக்கணம் வகுத்த நல்லாசானை எமது அன்னை யாழ். இந்து இன்று பிரிகின்றாள்.

ஒரு சிறந்த பண்பாளரை, வீரரை, நிர்வாகியை, ஆசிரிய சேவைக்கு தன்னை அர்ப்பணித்தவரை இனிமேல் யாழ். இந்து பிரதி அதிபர் ஆசனத்தில் நாம் பார்க்க முடியாது என்பதை எண்ணும்போது நெஞ்சம் நெருடுகின்றது.

எமது பாடசாலை வரலாற்றில் அவர் ஒரு மைல் கல் பல்துறை விற்பன்னராக எமது பாடசாலைக்கு அவர் ஆற்றிய சேவை எழுத்தில் வடிக்க முடியாதவையாகும்.

**க. தர்மகுலசிங்கம்,**
சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி,
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை

## சிறந்த நிர்வாகி

திரு. சோமசுந்தரம் பள்ளிப் பருவத்திலே சிறந்த அதிவிரைவு ஓட்டக்காரர்; பின் தேர்ச்சி பெற்ற மெய்வல்லுநர் துறை மத்தியஸ்தராகவும் கண்ணியமுள்ள முதல்தர தொடக்குநராகவும் பத்திரம் பெற்றவர்; பல காலமாக யாழ். மாவட்ட தடகள சம்மேளனத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக கடமை புரிந்து வருகிறார்: சிறந்த ஹொக்கி ஆட்டக்காரர் யாழ் மாவட்ட ஹொக்கி அணிகளுக்குத் தலைமை வகித்து தேசிய மட்டத்தில் பெருமை பெற்றுத்தந்தவர்; யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றி பெருமை பெற்றவர் சிறந்த அமைப்பாளர்; நிர்வாகி என ஏற்றுக் கொள்ளப்பட்டவர்; உதைபந்தாட்ட முதல்தர மத்தியஸ்தர்; யாழ் மாவட்ட உதைபந்தாட்டச் சங்கங்களில் நீண்ட காலம் பணியாற்றியவர்.

அவர் நல்லதோர் ஆலோசகர்; பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணும் நல்ல பரிகாரி; சட்டத்தை மதிக்கும் குடிமகன்; திட்டவல்லுநர்; திறமைமிக்க நிர்வாகி; உற்ற இடத்து உதவும் நண்பன்; பகைமை பாராட்டாத எதிரி; இலக்கணங்களுடனான இலட்சியவாதி; உள்ளத்தால் தூய்மை பெற்றவர்; விளையாட்டு மனப்பான்மை மிக்க வீரர்.

**திரு. ம. பத்மநாதன்,**
யாழ் பல்கலைக்கழகம் உடற்கல்வித் துறை.

## இன்றும் இளைஞர்

சோமருக்கு வயது அறுபது? நம்பமுடியவில்லை. அவரது நடத்தைகளில், செயற்பாட்டில், உடல் தோற்றத்தில் அப்படியான வயது முதிர்வைக் காணமுடியவில்லையே!

இன்னும் நீண்ட காலத்திற்குச் சேவையாற்றக் கூடிய மனவுறுதியும், தேகாரோக்கியமும், சுறுசுறுப்பும், இளமையும் அவரிடம் காணப்படுகின்றன. அவர் இன்றும் இளைஞரே!

பாடசாலை வாழ்க்கையில் அவரது செயற் தொடர்பு இல்லாததுறை என ஒன்று இருந்ததில்லை. பாடசாலையின் ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றைப் பேணுவதிலும் வழிநடத்துவதிலும் தன் கடமையைத் திறம்பட ஆற்றியுள்ளார் அவர்.

தாம் ஏற்ற எந்தப் பொறுப்பையும் அனைவரும் மெச்சி மகிழும் வகையில் நிறைவேற்றிக் காட்டும் திறன் படைத்தவர் சோமர்.

**எல். ஓங்காரமூர்த்தி,**
சிரேஷ்ட போதனாசிரியர்,
தொலைக் கல்வி நிலையம், வேலணை.

## அவர் ஒரு பல்கலைக்கழகம்

கப்டன் என் சோமசுந்தரம் இனியவர்; பண்பாளர்; அறிஞர்; செயல்வீரர்;

வயதில் அறுபதை நிறைவு செய்யினும் உள்ளத்தில் ஆறுவயதுப் பாலகனின் பண்பையே காண்கின்றோம். அவர் ஒரு நிறைந்த பல்கலைக்கழகம்.

நானும் எனது நண்பர்களும் அவரிடம் இருந்து கற்றறிந்த பாடங்கள் பல அவை எமக்கு என்றும் வழிகாட்டியாக இருக்கும்.

**தா. அருளானந்தம்,**
பிரதி அதிபர், யாழ். இந்துக் கல்லூரி.

## இவர் ஓய்வு இந்துவுக்கு தொய்வு

கல்லூரி வாழ்க்கையை முழுமையாகப் பயன்படுத்திய ஒருவர் கப்டன் சோமசுந்தரம்.

வருடத்தின் மூன்று பருவங்களிலும் விளையாட்டு மைதானத்தில் இயங்கி, கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்தவர்.

படைபயில் குழுவின் முதுகெலும்பாகத் தொழிற்பட்டு, முதன்மை பெற்று, Captain பதவிக்கு உயர்ந்ததோடு இத்துறையில் மாகாண முதன்மையைக் கல்லூரிக்கு வாங்கித் தந்து, தானும் பெற்றவர். இத்துறைகளில் தோய்ந்தமையால் பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பைக் கைவிட்டவர்.

ஆங்கிலத்தில் சிறப்புப் பயிற்சி பெற்று, மதிப்புக்குரிய ஆசிரியர் ஆனார்.

தன் கல்லூரித் தாயின் சேவையில் ஈடு இணையற்ற பங்களிப்புச் செய்தவர் அவர் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளராக பல்லாண்டு பணி புரிந்து, வெற்றிகள் பல கண்டவர்! தன்வழியில் குறுக்கிடுவோரை லாவகமாக வெற்றி கொள்ளும் சாணக்கிய விவேகி; பணிவன்பு நிரம்பியவர்; ஆனால் தன்மானம் மிக்க மனிதன்.

விடுதி அதிபராக, வில்லங்கமான காலத்தில் பதவியேற்று, விரும்பத்தகுந்த மாற்றங்களை செம்மையாகச் செய்தவர்; ஈற்றில் கல்லூரியின் பதில் அதிபராக உயர்ந்து, வழிகாட்டியாகத் திகழ்பவர்; அதிபர், உடன் ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் பெரும் செல்வாக்கோடு மிளிர்ந்து நிற்பவர்.

அது மட்டுமா? யாழ். இந்து என்ற கூட்டுக் குடும்பத்தின் வெகுசனத் தொடர்பாளரும் (P. R. O.) இவரே.

இவர் ஓய்வு இந்துவுக்குத் தொய்வு. என் செய்வோம்?

**க. சிவராமலிங்கம்,**
முன்னாள் பிரதி அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

யாழ் இந்து பிரதி அதிபர் கப்டன் என். சோமசுந்தரத்தின் மணி விழா இன்று நிகழ்வதை ஒட்டி இந்தச் சிறப்பிதழ் வெளியிடப்படுகின்றது மணி விழா மலருக்கு பிரமுகர்கள் தந்த நயப்புரைகளின் சில பகுதிகள் இந்தச் சிறப்பிதழில் பிரசுரமாகின்றன.

- மணிவிழாக் குழு.

விளம்பர இல. (சி-6771)

## சாதனைகள் புரியும் கர்மவீரன்

தனி மனிதன் தலைவனாக முடியாது. அணியில் ஒருவனே தலைவன். இந்துக் கல்லூரி என்ற ஒரு பலமான பல்துறை அணியின் நாயகனே கப்டன் என். சோமசுந்தரம் பிரதி அதிபர் அவர்கள்.

அன்பினால் அனைவரையும் கவர்ந்து, பணிவான வாழ்வதனை ஆயுதமாகக் கொண்டு சாதனைகள் பல புரிந்த கர்மவீரன். தர்க்கமாயினும் தர்மம் தவறாத நல்லாசான். நினைவில் கொள்கையில் பல புதிய பாடங்களைப் போதிக்கவல்ல ஆற்றலை யான் பெறுகிறேன்.

நிமிர்ந்த நடை; அதில் ஒரு சுறுசுறுப்பு; இன்முகம்; அதில் இழையோடும் குறும்பு; தூய்மையான தோற்றத்தில் ஓர் உள்ளொளி. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நினைவலைகள் எழும்போது எல்லாம் மனத்திரையில் கப்டன் சோமசுந்தரம் அவர்களின் இன்முகமே நிழலாடும்.

அவரின் ஆளுமை செழுமையானது ஆம், கடலும் அலையும் போன்று இந்துக் கல்லூரியுடன் சங்கமித்து, மானுடத்தை நேசிக்கும் மாந்தரின் உணர்வுகளில் பிரதிபலிக்கும் இப்பெரியார், ஏற்கும் பணியை மிக ஒழுங்காக, அழகாக, புதுமையாக, மிகவும் கவர்ச்சியாக, கனகச்சிதமாக தானே இறுதிவரை தொண்டனாக நின்று நிறைவேற்றும் பேராற்றல் கொண்டவர். இதன் மூலம் ''செயல்வீரனே விளையாட்டு வீரன்'' என்ற தாரகமந்திரத்தைத் தனதாக்கிக் கொண்ட மேலாளர்.

நண்பர்கள் மத்தியில் கலகலப்பாக ஒளிரும் இப்பெரியாரைச் சூழ, பல்துறைப் பாண்டித்தியம் பெற்றவர்கள், பெரியோர்கள், வீரர்கள் தினாந்திரம் கூடியிருக்கக் காணப்படுவதே இவர் ஒரு நல்லாசான் என்பதற்கு உரைகல்.

**வீ. கே. சண்முகலிங்கம்,**
பயிற்றுநர் விளையாட்டுத்துறை,
கனகரத்தினம் ம. ம. வி.,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கோல்டன்கொமட், கைலைன் பிறவுண், லோமன் பிறவுண், வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் வர இருப்பதால் ஓடர்களுக்கு முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும். திருமகள் ஸ்ரோர்ஸ், 705, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (28581)

லேயர் பிறிமிக்ஸ் (Layer Premix), புறொயிலர் பிறிமிக்ஸ் (Broiler Premix) மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். திருமகள் ஸ்ரோர்ஸ், இல. 705, கே. கே. எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (28582)

பாவித்த மிகவும் நல்ல நிலையிலுள்ள தேக்கு மரப் பலகையினால் செய்யப்பட்ட சாப்பாட்டு மேசையும் இதற்குரிய குசன் போட்ட கதிரைகள் ஆறு, சிங்கிள் செற்றி கதிரைகள் நான்கு, ரீப்போ ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (28599)

ஒரு வாரம், மூன்று வாரங்கள் நிரம்பிய ஹங்கேரியன் பாமாஸ், சில்க்கி குஞ்சுகளும், அடைவைக்க உகந்த முட்டைகளும் விற்பனைக்குண்டு. இல. 684, (91) நாவாந்துறை றோட், (நாவலர் வீதி) ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (28605)

புதிய நீர் இறைக்கும் இயந்திரம் றொபின் Ey 20 விற்பனைக்கு உண்டு. இல. 55, சீனியர் லேன் கலட்டி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (6876)

## ஆடு விற்பனைக்கு

யமுனா பாறி (Jamnapari) பால் ஆடும், கடாக்குட்டியும் விற்பனைக்கு உண்டு. எஸ்.ரி. வரதராஜன், காவல்துறை அருகில், கோப்பாய் வடக்கு, கோப்பாய். (6875)

## காணவில்லை

இரண்டரை வயது நிரம்பிய வெள்ளை பொமனேரியன் நாய்க்குட்டியை 23-12-93 தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள் Dr. பாலசுப்பிரமணியம், இணுவில் எனும் முகவரிக்கு தெரிவிக்கவும். (6877)

## திருமண சேவை

சொந்த தொழில் புரியும் வசதியான மணமகன்கள் எம்மிடம் உண்டு. சாதக விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இ. பாஸ்கரன், திருக்குமரன், மங்கள ஏஜன்சி, 41, பிரப்பங்குளம வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (28580)

## வாங்க / விற்க

காணி வீடு வாடகைக்கு கொடுக்கவோ அல்லது விற்பனை செய்யவோ விரும்புபவர்களும் வாங்க விரும்புபவர்களும் நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளலாம். இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி, இல. 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (28578)

## தேவை

யாழ். சிவலிங்கப்புளியடிக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் இரண்டு பரப்பு காணி தேவை. விற்பனை செய்யவிரும்புவோர் நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளலாம். இ. பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜன்சி, இல. 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (28579)

## கல்வி

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவில் இருந்து Distinction பெறுபேறடைவதற்கு குறைந்த காலங்களில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி (6870)

## புலமைப்பரிசில்

யாழ். Bond நிறுவன வெளியீடுகளான ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் தொகுதியும், 8 வருட கடந்த கால வினாத்தாள்கள் தொகுதியும், விடைகளுடன் எல்லா புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (28596)

## ஜோதிட விஞ்ஞானம்

14-4-94 வரை, அக்டோபர் / நவம்பர் முதல் வியாழ, சனி மாற்றப் பலாபலன்கள் ரூபா 10/- எங்கும் கிடைக்கும். பகவான் மருந்தகம், 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். எண்ஜோதிடம், ரேகை சாஸ்திரம், விவாகப் பொருத்தங்கள், ஜோதிட விஞ்ஞானக் கணிப்புகளுக்கு நேரிலே சந்திக்கலாம். Prof. சத்தியதாஸன். (6748)

## புலமைப் பரிசில் பயிற்சி

வெளிவந்து விட்டது! விற்பனையாகிறது! ஆண்டு 5 புலமைப்பரிசில் நவீன பயிற்சி. 21 மாதிரிக் கட்டுரைகளையும், 10 வினாத்தாள்களையும் (தமிழ், கணிதம்) விடைகளையும் தன்னகத்தே கொண்டது. ஆக்கம்: ஆசிரியர் த. அம்பிகைபாகன், எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (28602)

## சோதிடம்

கைரேகை சாதகம், இவைகொண்டு, மாணவர் உகந்த உயர்கல்வி தேர்வுக்கும், திருமணத்தில் கிடைப்பவர் தோற்றம், பதவி, குடும்ப நிலை, திக்குத்திசை வேண்டிய விவரங்களுக்கும், பிறநாட்டுப் பயணம், பிற நாட்டுச் சாதகங்கள் மற்றும் பிரச்சினை யாவுக்கும் தீர்க்கமான ஆலோசனைக்கு நாடுங்கள்: இராசேந்திரன், கோயில் வீதி, கிழக்கு கொக்குவில். (28593)

## கதிரை கொள்வனவு

வடக்கு – கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் சாவகச்சேரி நகரசபை சபா மண்டபத்திற்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

# கரவெட்டிக் கல்விக் கோட்டத்தில் சாதனை

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை மாணவர்கள் லோ. பிரதீப், ம. அஜந்தி, பா. முருகவேள், தி. ஜெயசர்ஜன், கு. கிருபாளினி, ப. நிலானி, க. கிருஷ்ணபவன், ச. அஜீஸ்குமார், கி. பிருந்தாபன், க. சுந்தரேஸ்வரன், ஸ்ரீ. சிவகாந்தன், கி. அருண்பிரசாத், சி. பாலமுரளி ஆகிய 13 பேரும் சித்தியடைந்ததன் மூலம், கரவெட்டிக் கல்விக்கோட்டத்தில் நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை சாதனை படைத்துள்ளது.

சித்தியெய்திய மாணவச் செல்வங்களையும், சித்திக்கு வித்திட்ட ஆசிரியர்களையும், அதிபரையும் பாராட்டுகின்றோம்.

பெற்றோர்கள்.
பழைய மாணவர்கள்.
பா. அ. சபை, ப. மா சங்கம்.

(28586)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் பொன்னம்பலம் கமலநாதன்

தோற்றம்: 01 - 09 - 1942

மறைவு: 19 - 12 - 1991

திதி: 26 - 12 - 1993

அன்புத் தெய்வமே! நாம் வாழ வழிகாட்டிய அன்பின் சிகரமே! எம்மை நல்வழி நடத்திய பண்பின் உறைவிடமே! கலங்கரை விளக்காய் ஒளி தந்து வாழ வைத்த குடும்பத்தின் குலவிளக்கே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி பிள்ளைகள்,
அம்மா, சகோதரங்கள்,
மைத்துனர்கள்.

22, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.

(28600)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

யாழ்ப்பாணக் கல்லூரியில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை 1993 இல் சித்தியடைந்த மாணவச் செல்வங்களையும், அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

| பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 1. செல்வன் சத்தியசீலன் குமரன் | — 163 |
| 2. செல்வன் மாணிக்கசிங்கம் செந்தூரன் | — 157 |
| 3. செல்வி சிவனேஸ்வரன் சிவகௌமினி | — 157 |
| 4. செல்வன் ஆறுமுகநாதன் விஸ்வாகரன் | — 154 |
| 5. செல்வி மனோகரராஜன் மதுரா | — 154 |
| 6. செல்வி குருசாமி கவிதா | — 153 |
| 7. செல்வன் குருசாமி கபிலன் | — 149 |
| 8. செல்வி சந்திரதாஸ் வேணி | — 142 |
| 9. செல்வி தியாகராசா காயத்திரி | — 140 |
| 10. செல்வன் சந்திரலிங்கம் டிலக்ஷன் | — 138 |
| 11. செல்வி பழனிவேல் கஜானி | — 137 |
| 12. செல்வி சண்முகலிங்கம் சசிரேகா | — 137 |

அன்புள்ள பெற்றோர்கள்

வட்டுக்கோட்டை. (6872)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 11 — 11 — 1975

வீரச்சாவு: 11 — 11 — 1993

## லெப். ஆதித்தன் (இளங்கதிர்)


(செல்வம் விஜயகுமார்)

"பூநகரியில் பொருதினாய்
எதிரியை சிதறடித்தாய் - எங்கே
சென்று விட்டாய் - விடிகின்ற
ஈழத்தைப் பாராமல்."

— குடும்பத்தினர்.

சிவன்கோயிலடி,
சாவகச்சேரி. (28591)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்: 08 — 04 — 1904

ஆண்டவன் அடியில்: 24 — 11 — 1993

## அமரர் இ. கந்தசாமி

பண்போடும், பாசத்தோடும் வளர்த்து எம்மை எல்லாம் ஆளாக்கிவிட்ட எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கிற்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி. அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டும் அன்பின்,

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பழைய ஆஸ்பத்திரி வீதி,
வட்டுக்கோட்டை. (28601)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 26 — 01 — 1944

தேக வியோகம்: 19 — 12 — 1991

பிரம்மஸ்ரீ

## சின்னஸ்வாமிசர்மா சோமாஸ்கந்தசர்மா

திதி: 26 — 12 — 1993

உங்கள் பிரிவால் வாடும்:
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்.

சிவன்கோயிலடி,
முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம். [6759]

# யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வழங்கும் முழுநிலா அறிவியலரங்கு

இடம்: குமாரசுவாமி மண்டபம்
காலம்: 28 — 12 — 1993 செவ்வாய்

3 - 30 — 4 - 30 மணி
'யாழ். குடாநாட்டு நீர்வளமும் பேணலும்'
திரு. இரா. சிவச்சந்திரன்
(இணைப்பாளர், புறநிலைப்படிப்புக்கள் அலகு, யாழ். பல்கலைக்கழகம்)

4 - 30 — 5 - 30 மணி
'தளை நீக்கத்திற்கான அரங்கு'
திரு க. சிதம்பரநாதன்
(நுண்கலைத்துறை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்,
செயலர்.

(சி-6730)

# வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் 6ஆம் ஆண்டு அனுமதி

6ஆம் ஆண்டில் சேர விரும்பும் மாணவர்கள் 30-12-1993 காலை 9 மணிக்கு, தமது தேர்ச்சி அறிக்கையுடன் நேரில் சமுகம் தரவும்.

அதிபர்,
வயாவிளான் ம. ம. வி.
உரும்பராய்.

(6757)

# புறநிலைப்படிப்புகள் அலகு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**EXTRA - MURAL STUDIES UNIT,**
**UNIVERSITY OF JAFFNA**

## புறநிலை கற்கை நெறிகள்
## EXTRA-MURAL COURSES

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புகளில் பொது விரிவுரைத் தொடர்களையும், அடிப்படைக் கற்கை நெறிகளையும் 1994ஆம் ஆண்டு நடத்தவுள்ளது, சனி, ஞாயிறு தினங்களில் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள இக் கற்கை நெறிகளைப் பயில்வதற்கு கல்வித்தகைமை சான்றிதழ் எதுவும் தேவையில்லை. 18 வயதிற்கு மேற்பட்ட ஆர்வலர்கள் எவரும் தமது முகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட அனைத்து விவரங்களையும் கொண்ட விண்ணப்பப்படிவமூலம் பொது விரிவுரைத் தொடர், அடிப்படைக் கற்கைநெறி ஆகியவற்றின் தலைப்பை குறிப்பிட்டு தனித்தனியாக விண்ணப்பிக்கவும்.

அடிப்படைக் கற்கை நெறிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மாத்திரம் பதிவுக் கட்டணமாக ரூபா 100/- செலுத்தவேண்டும்.

01. பொது விரிவுரைத்தொடர்கள் (குறைந்தது 20 மணித்தியாலங்கள்) (Series of Public Lectures)
- 1.1 இசைரசனை (Appreciation of Music)
- 1.2 நலவாழ்வு (A Healthy Life)

02. அடிப்படைக் கற்கைநெறிகள் (குறைந்தது 40 மணித்தியாலங்கள்) Foundation Courses:
- 2.1 பொதுவாழ்வில் பிரயோக எந்திரப் பொறியியல் (Applied Mechanical Engineering in common Life)
- 2.2 உணவு பதனிடல் தொழில் நுட்பம் (Food Processing Technology)
- 2.3 உணவகங்களின் முகாமைத்துவம் (Management of Restaurants]
- 2.4 வீட்டுப்புறக் கோழி வளர்ப்பு (Backyard Poultry)
- 2.5 மீன்பிடியியல் (Fisheries)
- 2.6 வாழிடமும் வாழ்வும் (Households and Welfare)
- 2.7 உடற்கல்வி (Physical Education)
- 2.8 தொடர்பியலுக்கான ஆங்கிலம் (English for Communication)
- 2.9 திரைப்பட இரசனை (The Film appreciation)
- 2.10 ஆடைத் தொழில் நுட்பம் (Apparel Industry)
- 2.11 விவசாய உற்பத்தித்திறன் மேம்பாடு (Increasing Agricultural Productivity)
- 2.12 நாளாந்த வாழ்வில் தாதிப்பராமரிப்பு அறிவு (Nursing Knowledge in day to day Life)

புலமை சான்றோர்: (Resource Persons)

மேற்படி தலைப்புக்களில் நடைபெறவுள்ள கற்கை நெறிகளில் புலமை சான்றோராகப் பணியாற்ற விரும்பும் பல்கலைக்கழகத்திற்கு வெளியேயுள்ளவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் தங்கள் தகைமை விவரங்களைக் குறிப்பிட்டு புறநிலைப்படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

புறநிலைப்படிப்புகள் அலகு,
யாழ்ப்பாணம்.
23-12-1993 (சி/6761)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## காலப் பதிவுகள்

காலத்தின் பதிவாக அமையக் கூடிய எழுத்துக்கள் வடிக்கப்பட வேண்டும். அவை நூல் வடிவம் பெறவேண்டும்.

அண்மையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இன்று நடப்பவை, நாளை வரலாறாகப் பார்க்கப்படுகின்றன. எனவே இன்று நடப்பவற்றை நாளைய சமுதாயத்துக்கு வழங்க வேண்டியது இன்றைய சந்ததியின் பிரதான கடமை. இன்று நடப்பவற்றின் பதிவுகள் நாளைய சந்ததிக்குத் தெரிந்தால் தான் அவர்கள் தங்கள் கால நிகழ்வுகளைத் தக்கபடி நெறிப்படுத்தவும், தமது எதிர் காலத்துக்குரிய திட்டங்களை முன் நோக்குடன் பார்க்கவும் வழி பிறக்கும்.

ஆகையால் காலத்தின் பதிவான எழுத்துக்கள் இலக்கிய வடிவத்தில் மட்டும் அமைய வேண்டும் என்பதல்ல. மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையின் நிகழ்வுகளும் பதியப்பட வேண்டும். நூல்களாக அடுத்த சந்ததிக்கு வழங்கப்பட வேண்டும்.

அண்மையில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் விவசாய ஆராய்ச்சிப் பகுதியின் உயர் அதிகாரி ஒருவர் கவலை தரக் கூடிய ஒரு தகவலை வெளியிட்டார்.

நாம் இந்த மண்ணை எங்கள் மண் என்கின்றோம். எங்கள் சொந்த மண் என மார் தட்டிக் கூறுகிறோம். அந்த மண்ணைப் பாதுகாப்பதற்காக, எங்கள் இளம் வீரர்கள் எல்லாம் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்கிறார்கள். அதற்காகவே மக்களும் பல அவலங்களையும் அனுபவிக்கிறார்கள்.

ஆனால் எமது குடாநாட்டு மண் அடைந்து வரும் மாற்றங்கள் பற்றிய பதிவுகள் இல்லை. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளினதும் மண் வகைகளின் தன்மைகள் பற்றிய பதிவுகள் ஆகக் கூடியது ஐந்து வருடங்களுக்கே உண்டு. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் மண்வளம் எவ்வாறு இருந்தது. இப்போது எவ்வாறு மாறியுள்ளது என்பதனை ஒப்பீட்டு அடிப்படையில் அறிய முடியாமல் உள்ளது.

இந்தக் குறைபாடு மண்ணைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல; தமிழ் மக்களின், அவர்களின் வாழ்க்கையின், அவர்களின் வளங்களின் எல்லாத் துறைகளிலுமே நிறைய விரவி உள்ளது.

அரசியல், பொருளாதார, சமூக, சமய ரீதியான நிகழ்வுகளையும் மாற்றங்களையும் பதிவு செய்யும் பழக்கம், ஆவணப்படுத்தும் ஆர்வம் தமிழர்களிடையே மிகவும் குறைவு. வாழ்க்கையில் பல சாதனைகளைப் படைத்து புகழ்பெற்ற ஆற்றல் மிக்கவர்கள் கூட தமது அனுபவங்களைப் பதிவு செய்வதில்லை. இந்த நிலை மாறவேண்டும். இப்போதே மாற்றப்படவேண்டும்.

ஆகையால் காலப் பதிவுகள் எல்லாப் பிரிவுகளிலும் தேவைப்படுகின்றன. அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி, மருத்துவம், விவசாயம், கலை, பண்பாடுகள், சமயங்கள், இலக்கியம் என்று அவை விரிந்து செல்லும்.

அந்தந்தத் துறை சார்ந்தவர்கள் தாங்கள் நிபுணத்துவம் பெற்ற, அனுபவம் மூலம் உய்த்த, தமக்கு விருப்பமுள்ள, பரிச்சயமுள்ள விடயங்களைப் பதிவு செய்வது அவசியம். ஆவணப்படுத்துவது மிக அவசியமாகும்.

தங்கள் பதிவுகளை நூல் வடிவாக்கக் கூடிய வசதிகள் எல்லோருக்கும் கிடைக்காது. ஒருவர் பதிவு செய்ததை மட்டும் தனி நூலாக வெளியிட வேண்டும் என்பதுமல்ல. ஒரு விடயம் சம்பந்தப்பட்ட பலரின் பதிவுகளைத் தொகுத்து ஒரு நூலாகவும் வெளியிடலாம்.

இவற்றை எல்லாம் இனங்கண்டு செய்வதற்கு, ஒருமுகப்படுத்திச் செயலாக்குவதற்கு, நிறுவன மயப்படுத்தப்பட்ட தனியான ஓர் அமைப்புத் தேவை. தமிழர்களுக்கென ஓர் அரசு அமையும் வரை காத்திருக்காது, உத்தேச அமைப்புக்கான கால்கோள் இப்போதே நடப்பட வேண்டும். இது விடயத்தில் ஏற்கனவே பிந்திவிட்டோம். ஒன்றுமே செய்யாமல் இருப்பதைவிட பிந்திச் செய்வது பரவாயில்லை என்று திருப்திப்பட்டுக் கொண்டு, இது குறித்து ஆழமாகச் சிந்தித்து விரைந்து செயற்படுவோமாக.

# தமிழர்கள் சார்பிலேயே புலிகள் செயற்படுகின்றனர்

# அதனை மறந்து யுத்தம் நடத்துவது கற்பனைவாதமே

கொழும்பிலிருந்து வெளிவரும் 'லங்கா கார்டியன்' ஆங்கில சஞ்சிகையின் 01 – 12 – 1993 இதழில் ஜனத் ராஜபக்ச எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது.

கட்டுரையாளர், ஸ்ரீலங்காவின் வெளிநாட்டுச் சேவையில் ஆசியாவுக்கான பிரிவில் உயர் அதிகாரியாகப் பணிபுரிந்தவர்.

தமிழாக்கம்;
கு. சிவபாலசுந்தரம்பிள்ளை

ஜனகபுர (மண்கிண்டி மலை), கட்டைக்காடு ஆகிய இடங்களில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் மீதான பெரிய தாக்குதல்கள் போல, அண்மையில் பூநகரியில் இடம்பெற்ற தாக்குதல் வடக்கு - கிழக்கு நிலைமை பற்றியும், எதிர்காலம் பற்றியும் பொதுமக்களை சிந்திக்கவைத்துள்ளது. இதற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகள் பதவி விலக வேண்டும் அல்லது பதவி விலக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயத்தையும் அந்தத் தோல்வி மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

திருமதி இந்திரா காந்தி அவரது சொந்தப் பாதுகாவலர்களால் கொலைசெய்யப்பட்டபோது, அவரது பாதுகாப்பு விடயங்களுக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி பதவி விலகினார் என்பதும், வெளிநாட்டு இளைஞர் ஒருவர் முன் அனுமதி இன்றித் தமது விமானத்துடன் செஞ்சதுக்கத்தில் தரையிறங்கியபோது சோவியத்தின் பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகினார் என்பதும் உதாரணமாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.

நன்கு சிந்தித்து விவாதிக்கும் மக்களிடம் ஏற்பட்டு வரும் யுத்தத்திற்கு எதிரான கருத்துக்களும் எண்ணங்களும் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

இங்கு இனப்பிரச்சினை இல்லை, வடக்கில் பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என்று ஒரு பக்கமும்— நாட்டின் சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால் யுத்த நிலையில் நாட்டை வைத்திருக்க வேண்டும் என்று மறு பக்கமும்— கூறும் கருத்துகள் ஏற்புடையவையல்ல.

பின்வரும் பிழையான நிலைப்பாட்டினால் இந்நிலைகள் உருவாகியுள்ளன.

★ வடக்கையும் - கிழக்கையும் பிரித்தாளுவதன் மூலம் தான் அமைதியற்ற நிலையை ஏற்படுத்தி அதனை இனப்பிரச்சினைக்கு எதிரான யுத்த தந்திரமாக கடைப்பிடிக்கலாம் என அரசு எதிர்பார்ப்பது.

★ வழங்கும் அரசியல் தீர்வுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் சிறிது காலத்தில் நேரடி மோதலின்றியே வெற்றி பெறலாம் என்று எதிர்பார்ப்பது.

★ இந்தியாவின் ஆலோசனையின்றி அவர்களுடைய அரசியல் அமைப்பை பின்பற்றாது பிரச்சினையை தீர்க்கலாம் என்று எதிர்பார்ப்பது.

இனப்பிரச்சினைக்குரிய தெளிவாகப் புலனாகும் அடிப்படைக் காரணங்களைப் பற்றிய தவறான புரிந்துணர்வே இத்தகைய நிலைப்பாடுகளை தோற்றுவித்துள்ளது.

### தமிழர் சார்பிலேயே

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிரதான பிரதேசங்களாகவும் அவர்களின் யுத்த தளமாகவும் வடக்கு - கிழக்கு உள்ளது. ஆதாரம் நிறைந்த தமிழர் தாயகம் என்று தாம் கருதும் வடக்கு - கிழக்கு எல்லைக்குள் தமது சொந்தப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் எத்தனித்துள்ளனர். அவசியமான அளவு ஆயுத பலத்தையும் உருவாக்குகின்றனர். இவை யாவும் தமிழர்களின் சார்பிலேயே செய்யப்படுகின்றன. இதற்கு எதிராக பரந்த யுத்தம் நடத்த நினைப்பதும் பயங்கரவாதத்தை தூண்ட முயல்வதும் வெறும் கற்பனைவாதங்களே.

## அரசும் எதிர்க்கட்சிகளும் தத்தமது தீர்வுகளை முன் வைக்க வேண்டும்

பின்வரும் மூன்று தெளிவான காரணங்கள் இதில் இணைந்துள்ளன.

★ வடக்கு - கிழக்கு பிரச்சினையை சிந்திக்கும் போது அது விடுதலைப் புலிகளின் சுயநலத் தன்மையுள்ளது என அதைத் தட்டிக் கழித்து தமிழ்ச் சமுதாயத்தின் பிரச்சினை என்ற பரந்த நோக்கில்லாமை.

★ விடுதலைப் புலிகளுக்கும் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கும் தொடர்பில்லை என்ற நிலைப்பாடு.

★ விடுதலைப் புலிகளின் இராணுவ அறைகூவலை எதிர்நோக்கும் நிலை.

### அரசின் பொறுப்பு

நாட்டின் எந்தத் தேசியப் பிரச்சினைக்கும் ஒரு தகுந்த தீர்வை உருவாக்கி மக்களின் ஆதரவைத் திரட்ட வேண்டிய முக்கிய பொறுப்பு ஆட்சியில் இருப்பவர்களுக்கு உரியதே என்பது எனது கருத்து இதற்கு முன்வைக்கும் தீர்மானம் பற்றிய மக்கள் கருத்தை திரட்ட வேண்டிய கடப்பாடும் ஆட்சியாளர்களுக்கு உண்டு.

1983 ஜூலையில் இங்கு தமிழர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தியதும், பின்பு ஆறாவது அரசியல் திருத்த சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் சிங்கள அரசியல் சட்டத்தைப் பலப்படுத்தியதும், இதன் காரணமாக தீர்வுக்கான வழிமுறை தடுக்கப்பட்டதனால் இதய சுத்தியுடனோ அவ்வாறின்றியோ அரசு ஒரு தீர்வை முன்வைக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அரசின் நடவடிக்கையை எதிர்ப்பதே அன்றி தகுந்த வழிமுறையை முன்வைக்க எதிர்க்கட்சிகள் தவறிவிட்டன. அரசும் எதிர்க்கட்சிகளும் தத்தமது தீர்வை வெளிப்படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

ஒரு கட்டத்தில் எங்கள் நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டது. 1984 ஏப்ரலில் டில்லியில் நடந்த பேச்சுவார்த்தையின் போது. அதிபர் ஜெயவர்த்தனாவும் திருமதி பண்டாரநாயக்காவும் இணைந்து சிங்கள மக்களும் ஏற்கக் கூடிய பயனுள்ள தீர்வை முன்வைக்க வேண்டும் என்று திரு. அத்துலத்முதலியிடம் அப்போதைய வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவ் வற்புறுத்தினார். அப்போது திருமதி பண்டாரநாயக்கா 7 வருடங்களுக்கு நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

வெகுகாலம் சென்ற பின்பு மங்களமுனசிங்கா தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக் குழு அமைக்கப்பட்டும் அமைதித் தீர்வை எட்ட முடியாததைக் காண்கின்றோம்.

ஒரு முறை டில்லியில் பொது நல நாடுகளின் அமர்வில் கலந்து கொண்ட போது அதிபர் ஜெயவர்த்தனா திருமதி காந்தியைப் பிரதிநிதித்துவம் செய்த பார்த்தசாரதியுடன் ஒரு தீர்வுக்கு சம்மதித்தார். எனினும் அவர் இலங்கை திரும்பியதும் ஐ. தே. க. உறுப்பினர் சிலரின் எதிர்ப்புக் காரணமாக அது கைவிடப்பட்டது. இணைப்பு "சி" திட்டம் என்று அழைக்கப்பட்டது.

### இந்தியத் தலையீடு

1983 ஜூலையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாகவும், 1983 ஆகஸ்டில் கொண்டுவரப்பட்ட ஆறாவது திருத்தச் சட்டம் காரணமாகவும், தமிழர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்ததனால் வடக்கு - கிழக்கில் இந்தியா தலையிட நேரிட்டது. இதன் காரணமாக இப்போதும் சட்ட வரைவுள்ளதாக உள்ளதும், நடைமுறையில் இல்லாததுமான 1987 ஜூலையின் இரண்டு உப தீர்வுகளை ஸ்ரீலங்கா உருவாக்கியது. தமிழர்கள் இந்தியாவின் முடிவான அங்கீகாரத்தையும், அதனை உண்மையாக அமுல்படுத்துவதற்கான அவர்களின் உத்தரவாதத்தையும் நாடினர்.

இந்தியாவில் உள்ள தமிழ் மாநிலங்களுக்குரிய அதிகாரங்களைக் கொண்டது போன்ற எந்தத் தீர்வையும் ஏற்கக் கூடாது என இந்தியா இலங்கைத் தமிழரை வற்புறுத்தவில்லை. 1985 இல் ராஜீவ் காந்தி தெரிவித்த ஆகக் குறைந்த அதிகார அலகு இன்றும் பெறுமதி மிக்கதாக உள்ளது. இந்திய அதிகாரிகள் தமது அரசியல் சட்டத்தில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் இங்கும் சரியான முறையில் இடம்பெற வேண்டும் என்பதை எமது கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

தமிழர்களின் ஆதரவைப் பெற்று நியாயமான தீர்வு காணவும், விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான பலத்தை எதிர்த்துப் போராடவும் இந்தியாவின் உதவி அப்போது பெறுமதி மிக்கதாக இருந்தது ஆயினும் இதற்காக இந்தியாவுடன் அவசரமாக ஏற்படுத்திய தொடர்பு பிரேமதாச நிர்வாகத்தின் இந்திய அமைதிப் படை மீதான நடவடிக்கையினால் பாதிப்படைந்தது.

### இந்தியா உதவுவது சாத்தியமில்லை

இதற்கும் மேலாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக எமக்கு உதவ இந்தியா தீர்மானித்தாலும், தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கும் அரசியல் தீர்வு இல்லாத பட்சத்தில் அது சாத்தியமானதல்ல.

முடிவாகக் கூறுவதானால் 1983 ஆகஸ்ட் சர்வ அடிப்படையில் பார்க்கும் போது, இந்தியா வழங்கிய அடிப்படை உரிமைகளுக்கான ஆதாரமான ஏக இலங்கை என்பதற்குப் பதிலாக, ஐக்கிய இலங்கை என்ற கோட்பாடே ஏற்கத்தக்கது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியுடனான பேச்சு வார்த்தையின்போது திரு. எச். டபிள்யூ ஜெயவர்த்தனாவிடம் இது வலியுறுத்தப்பட்டது ஆகவே ஏக இலங்கை என்ற கோட்பாடு இந்தியா இப்பிரச்சினையில் இருந்து விலகிச் செல்லவே வழிவகுக்கும். இதனை இலங்கையர்கள் உணர வேண்டும். ★

## சுற்றுப்புற சுகாதாரத்தை கடைப்பிடிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 26

தற்போது பெய்து வரும் தொடர் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு மற்றும் அதனால் உருவாகியுள்ள தொற்று நோய்களின் அபாயம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சுற்றுப் புறச் சுகாதாரம், தனிநபர் சுகாதாரம் ஆகியவற்றை பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

அண்மைய தொடர் மழை காரணமாக தமிழீழத்தின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக கழிவுநீர் கான், மலகூட கழிவுகள் முதலியவற்றால் குடிதண்ணீர் நிலைகள் மாசடைந்துள்ளன. இதனால் மலத்திலிருந்து பரவும் நோய்களாகிய வயிற்றோட்டம், வாந்திபேதி, வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல், செங்கண்மாரி போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றின் தாக்கத்திலிருந்து எம் தேசத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக பின்வரும் சுற்றுப்புறச் சுகாதாரம் மற்றும் தனிநபர் சுகாதாரம் ஆகியவற்றை உறுதியாகக் கடைப்பிடிக்கும்படி மக்களை வேண்டிக் கொள்கிறோம்.

★ கொதித்து ஆறிய நீரை மட்டுமே குடிக்கவும்.

★ மலகூடம் பாவிக்கவும் அல்லது குழிகளில் மலம் கழித்து மூடி விடவும்.

★ மலகூடம் பாவித்த பின்பும், உணவு தயாரிக்க முன்பும், உணவுண்ண முன்பும் சவர்க்காரமிட்டுக் கை கழுவுங்கள்.

★ சுகாதாரமற்ற முறையில் தயாரித்து விற்கப்படும் உணவுகளைத் தவிர்க்கவும்.

★ வயிற்றுப்போக்கால் ஏற்பட்ட நீரிழப்பை ஈடு செய்ய உடனடியாக நெல்லுப்பொரிநீர், கஞ்சி, இளநீர், கொதித்தாறிய நீர், தேநீர், தேசிக்காய்நீர் அல்லது ஜீவனிக் கரைசலை போதிய அளவு கொடுக்கவும்.

★ இரத்தம் சீதத்துடன் மலங்கழித்தால் அல்லது வாந்தியும் காணப்பட்டால் வைத்திய உதவியை நாடுங்கள். (த)

## இடம்பெயர்ந்தோர் வீட்டில் திருட முயன்றோர் மாட்டினர்

சண்டிலிப்பாய், டிச. 26

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்தவர்களின் வீடுகளில் புகுந்து தளபாடங்களையும், வீட்டுப் பொருள்களையும் திருடி விற்று வந்த கோஷ்டியொன்று கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு சங்கானை காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு — சிரிமலை வீதியிலுள்ள வீடொன்றில் கடந்த வாரம், நான்கு பேரைக் கொண்ட திருடர் கோஷ்டியொன்று உட்புகுந்து வீட்டிலுள்ள தளபாடங்களையும் மற்றும் பொருள்களையும் திருடிக்கொண்டு வெளியேற முற்பட்டபோது, தற்செயலாக அப்பகுதிக்கு வந்த இடம்பெயர்ந்த வீட்டுக்காரரின் உறவினர்கள் — அவர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்டனர். இருவர் தப்பி ஓடிவிட்டனர். பிரான்பற்று கிராமத்தை சேர்ந்த இருவர் மட்டும் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்.

பிடிபட்ட இருவரும் — களவாடிய பொருள்களுடன் — சங்கானை காவல்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் இருவருக்கும் வேறு திருட்டு சம்பவங்களுடனும் தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது.

இக்கோஷ்டியில் இருந்து தப்பி ஓடியதாகக் கூறப்படும் மற்றும் இருவரையும் காவல் துறையினர் தேடி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-135)

## கப்பலில் வந்தோருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், டிச. 26

கடந்த 11 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு 'மாஹோ' கப்பல் மூலமாக வந்து சேர்ந்த அரச ஊழியர்களை தம்மை வந்து சந்திக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (உ-3)

## இன்று

வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி கோவிலில் நேற்று ஆரம்பமான திருவாசகப் பெருவிழாவில் இன்று ஞாயிறு நடைபெறும். இரண்டாம் நாள் நிகழ்வில் செல்வி புஷ்பா செல்வநாயகத்தின் சிறப்புச் சொற்பொழிவும், வர்ணராமேஸ்வரன் குழுவினரின் இசைக் கச்சேரியும் இடம் பெறும். (த)

★ ★ ★

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தாரால் மாதாமாதம் நடத்தப்படும் யோகாசனக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ் கச்சேரி— நல்லூர் வீதியிலுள்ள புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இன்று ஞாயிறு மாலை 6 மணிக்கு ஒளிவிழா நடைபெறும். ஒளி எங்கே? என்ற நாடகமும் முதல் முறையாக மேடை ஏற்றப்படும். (உ)

## நாளை

வடமராட்சிக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு. ச. செல்லத்துரையின் சேவை நலம் பாராட்டு விழா பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்தில், ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. கே. நடராசா தலைமையில் நாளை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். (உ-118)

★ ★ ★

தென்னை அபிவிருத்தி பற்றிய செயல் விளக்கமும், பயிற்சிக் கருத்தரங்கும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் நாளை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜெ. சத்தியேந்திரன் தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

அரியாலை சனசமூக நிலைய பாலர் கலை விழா நாளை திங்கள் பிற்பகல் 6 மணிக்கு நிலையத்தில் நடைபெறும். (த-111)

★ ★ ★

நவாலி கிறிஸ்தவ இளைஞர் சங்க பாடசாலை பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

நத்தார் கீதங்களும் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும். எதிர்வரும் 29, [illegible] பாராதை கிறிஸ்தவ இளைஞர் [illegible] ஆகியன இடம்பெறும். (த-152)

## தி.மு.கவின் உள் விடயங்களில் புலிகள் தலையிடுகின்றனர்!

### கருணாநிதி குற்றச்சாட்டு

தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்ட வை. கோபாலசாமிக்கு ஆதரவாக விடுதலைப் புலிகள் திமுகவின் உட்கட்சி விவகாரங்களில் தலையிடுகின்றனர்.

திமுக. தலைவர் மு. கருணாநிதி இவ்வாறு குற்றஞ்சுமத்தியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் சுற்றறிக்கைகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவாக வெளியிடப்படும் இதழ்களில் வரும் செய்திகளும் —

விடுதலைப் புலிகளால் திமுக. தலைவர் கருணாநிதியின் உயிருக்கு ஆபத்து என்று மத்திய உளவுத்துறை அளித்த தகவலை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன என்றும் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (உ-5)

## மன்னார் - பூநகரி பாதையை திருத்தும் வேலை ஆரம்பம்

அண்மையில் பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பழுதடைந்திருந்த மன்னார் - பூநகரி போக்குவரத்துப் பாதையைத் திருத்தி அமைக்கும் வேலைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

பல்லவராயன் கட்டு பகுதிக்கு குறுக்கே செல்லும் பாதையே திருத்தப்பட்டு வருகிறது.

இந்தப்பாதை சேதமடைந்திருந்ததால் முழங்காவில் பகுதிக்கு பொருள்களை எடுத்துச் செல்வது பாதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையை அடுத்தே பொதுநிர்வாகத் தொடர்பகத்தினர் பாதையை திருத்தும் பணியை மேற்கொண்டுள்ளனர். (உ-5)

## போருக்கு கால அட்டவணை வழங்கியும் பயன் இல்லை

### கொழும்பு சஞ்சிகை கருத்து

யாழ்ப்பாணம், டிச. 26

விடுதலைப் புலிகளுடனான போருக்கு படையினருக்கு அரசியல் தலைவர்களே கால அட்டவணை வழங்குகின்றனர்.

— கொழும்பில் இருந்து வெளிவரும் சஞ்சிகை ஒன்று இவ்வாறு தெரிவித்துள்ளது

விடுதலைப்புலிகளை அழித்துவிடலாம் என காலத்துக்கு காலம் அரசியல் தலைவர்கள் அறிவித்து வருகின்றனர். இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதிகளையும் படை அதிகாரிகளுக்கு அவர்கள் வழங்கி வருகின்றனர்.

ஆனால் தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்துள்ள படையினர் பெருந்தொகையான ஆயுதங்களைக் கொண்டு போராடியும் கூட — அவர்களுக்கு அளிக்கப்பட்ட கால எல்லைக்குள்— விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடியாத நிலையிலேயே உள்ளனர்— இவ்வாறு அந்த சஞ்சிகை மேலும் கருத்து வெளியிட்டுள்ளது. (உ-5)

## கலடாவில் மோதல்

கொழும்பு. டிச. 26

மூன்று நாட்களுக்கு முன்னர் கலடாவில் இரு தமிழ் குழுக்களுக்கு இடையே மோதல் இடம்பெற்றதாகவும்—

மோதலின்போது அவர்கள் துப்பாக்கிகளைப் பயன்படுத்தியதாகவும் நேற்றைய வானொலிச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## சமயப் பயிற்சி நாளை நிறைவு

யாழ்ப்பாணம், டிச. 26

கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யாழ். மாவட்ட மாணவர்களுக்கான சைவநெறித் தொண்டர் பயிற்சி நாளை காலை 9.00 மணிக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்துடன் நிறைவடைகின்றது.

மாணவர்கள் அனைவரும் யாழ். இந்துக் கல்லூரியிலும், மாணவிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் வதிவிடப் பயிற்சியை மேற்கொண்டுள்ளனர்.

இந் நிகழ்ச்சி நிறைவுறும் தினமான நாளை காலை 9.00 மணிக்கு மாணவர்களை அவர்களது பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு வருகை தந்து அழைத்துச் செல்லுமாறு யாழ். தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

## நேற்று 609 பேர் விடுதலை

கொழும்பு, டிச. 26

நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா வழங்கிய பொது மன்னிப்பின் கீழ் 609 சிறைக் கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். (உ-3)

## வெள்ளத்தில் மூழ்கி சிறுவன் பலி

தென்மராட்சி, டிச. 26

வெள்ளத்தில் மூழ்கி சிறுவன் ஒருவன் பலியான சம்பவம் கடந்த புதன்கிழமை கொடிகாமம் நாவலடியில் இடம் பெற்றது

அதே இடத்தைச் சேர்ந்த குணரத்தினம் சத்தியசீலன் (7 வயது) என்னும் சிறுவனே பலியானவர் ஆவார்.

பிரஸ்தாப சிறுவனின் குடும்பத்தினர் இடம் பெயர்ந்து பாடசாலையில் தங்கியிருந்ததாகவும் கடந்த புதன் சிறுவன் காணாமற்போய் விட்டதாகவும் —

பின்னர் வியாழன் சிறுவனின் சடலம் வேலி ஒன்றுடன் ஒதுங்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-117)

**தெருவோரம் மரம் நடுவோம்**
**கண்மணி போல் காத்திடுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

25 - 12 - 93 சனிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கத்தின் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 19 - 01 - 94 புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்.

968, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(சி-6763)



## SPOKEN ENGLISH WITH GRAMMAR

திரு. K. சபாநாயகம்

திங்கள் / வெள்ளி | 1.00 மணி

ஒவ்வொரு பிரிவிலும் 20 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஆரம்பம்: **03 - 01 - 94**

**BOND INSTITUTES**
யாழ்ப்பாணம்.

(28597)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெளிவாரி பட்டப்படிப்பு கற்கை நெறிகள்

## முதல் கலை/ முதல்வர்த்தகம் 1992/93

பொதுக்கலை பகுதி I /சிறப்புக்கலை பகுதி/ வர்த்தகம் பகுதி I - 1992/93
பொதுக்கலைபகுதிII/ சிறப்புக்கலைபகுதிII/ வர்த்தகம் பகுதி II - 1992/93
வழிப்படுத்தும் பயிற்சி I

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு பதிவு செய்துள்ள மாணவர்களுக்கு 03-01-1994 தொடக்கம் 13-01-1994 வரை வழிப்படுத்தும் பயிற்சி யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இடம் பெறவுள்ளது. நேர அட்டவணை விவரங்களை வெளிவாரி பரீட்சைப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். இக்கற்கை நெறிக்கு பதிவு செய்த சகல மாணவர்களையும் பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு வெளிவாரி பரீட்சைப் பகுதி இணைப்பாளர் கேட்டுகொள்கிறார்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்,

(சி 6765)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வடிவேலு தவமணி

காலஞ்சென்ற திரு ச. வடிவேலு அவர்களின் மனைவி தவமணி 25.12.93 அன்று அதிகாலை 5.15 மணியளவில் இயபதமடைந்தார்.

அன்னார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி நாராயணர் வேலுப்பிள்ளையின் மகளும் திரு. சுந்தரம்பிள்ளை (யாழ். கணேசானந்தா ஸ்ரோஸ்), திருமதி பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் சிவகணேசன் (2 ஆம் வருடம் சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), சிவகுமரன், சிவபாலன் (மாவீரர் தனம்) ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12 93) காலை 10 00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனக் கிரியைகள் மேற்கொள்ளப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
வ. சிவகணேசன்
(மகன்)

263, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(28607)

### கந்தையா அரசரெத்தினம்

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கந்தர்மடத்தில் வசித்தவருமாகிய கந்தையா அரசரெத்தினம் (முன்னை நாள் வர்த்தகர், தம்பதெனியா) நேற்று (25-12-93) காலமானார்.

இவர் கெட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், வசந்தா (கொழும்பு), ஜசிந்தா (கொழும்பு), கமலஜெயன் (யா/ இந்துக்கல்லூரி, 94 A/L) ஆகியோரின் அருமைத் தந்தையும், பிரணதார்த்திகரனின் (வீரகேசரி) மாமனாரும், வைஷ்ணவியின் அன்புப் பேரனும், திருமதி பூமணி மூத்தையா, திரு நாகராசா, திருமதி கனகாம்பிகை - கந்தையா, திருமதி ராஜேஸ்வரி - மகாதேவன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (26-12-93) முற்பகல் 11 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்;
திருமதி அரசரெத்தினம்
(மனைவி)

இல. 28, மணல்தறை லேன்,
கந்தர்மடம்.

(28608)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 298/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26 - 12 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

வெரித்தாஸ் விமர்சனம்:

# இனப்பிரச்சினை தீர்வுக்கு தடை பௌத்த மத அடிப்படை வாதமே

மணிலா, டிச.26

தமிழர் இனப் பிரச்சினையை இந்து மக்களின் பிரச்சினை என்ற ரீதியில் பௌத்த மதகுருக்கள் அணுகுவதால், எந்தத்தீர்வுக்கும் பௌத்த மத அடிப்படை வாதம் இணங்க மறுக்கிறது.

அதனால் தான் விலங்குகளையே கொலை செய்யக் கூடாது என்று கூறும் பௌத்த மத அடிப்படை வாதிகள் துப்பாக்கிகளை நம்புகின்றனர்.

ஆசியக் கண்டத்தை நெருங்கும் பேரபாயம் மத அடிப்படை வாதம்'' என்ற தலைப்பில் வெரித்தாஸ் வானொலியில் ஒலிபரப்பான உண்மையின் எண்ணங்கள் நிகழ்ச்சியில் இலங்கை பற்றி இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

ஆசியாக் கண்டத்தில் தான் உலகின் மிக முக்கிய மதங்கள் பிறந்தன என்பதாலோ என்னவோ மத அடிப்படை வாதம் ஆசியாவின் அமைதி முகத்தையே மாற்றி விடும் ஆயுதமாக எழுந்திருக்கிறது.

மேற்குலக நாடுகள் கிறீஸ்தவ மத அடிப்படை நாடுகளாக இருந்ததில் இருந்து மெல்ல மெல்ல மாறி தற்போது செல்வம், பணம், இனம் என்பவை தான் தங்கள் மதம் என நடந்து கொள்கின்றன. எனவே உலகின் பணக்கார நாடுகளில் மத அடிப்படை வாதம் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் வறுமையில் உழலும் ஆசிய நாடுகளில் தான் மத அடிப்படைவாதம் கோலோச்ச ஆரம்பித்திருக்கிறது.— இவ்வாறு வெரித்தாஸ் வானொலி மேலும் குறிப்பிட்டது.

மாணவரை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்து, அதனடிப்படையில் யாழ் பல்கலைக் கழக அனுமதி முறையை மாற்றியமைப்பது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

★ திறமை அடிப்படையிலான அனுமதி முறையைத் தொடர்ந்து பேண வேண்டும்.

★ பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை அந்தந்தப் பல்கலைக் கழகங்களுக்கு வழங்க வேண்டும். சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்கள் தமக்குத் தேவையான எண்ணிக்கையுடைய மாணவர்களைத் தாமே தெரிவு செய்ய அனுமதிக்க வேண்டும்.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

3 ஆயிரம்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சி —பூநகரிப் பாதையில் பல இடங்களில் பாதைகள் தாழ்ந்து போயுள்ளதாகவும்—

தாழ்ந்து போயுள்ள பகுதிகளில் டிராக்டர் மூலம் பாரிய கற்கள் போடப்பட்ட பின்னரே அப்பாதை ஊடாக பயணிகளை ஏற்றிக் கொண்டு வாகனங்கள் வந்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக அங்கு தங்கியிருந்த பயணிகளே பல சிரமங்களை அனுபவித்து நேற்று வந்து சேர்ந்தனர். (உ-3)

பெப்ரவரி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரம் சென்று விமானம் மூலம் பலாலிக்கு வருவார். மறுநாள் பருத்தித்துறைக்கு அவர் வந்து சேர்வார்.

14 ஆம் திகதி வரை அவர் குடாநாட்டில் தங்கியிருப்பார்.

— இவ்வாறு அங்கிலிக்கன் திருச்சபையின் யாழ். மறை வட்டம் தெரிவித்துள்ளது.

அங்கிலிக்கன் ஆயர் ஜனவரி முதற் பகுதியில் யாழ். வருவார் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ-3)

## பேக்கரிகளுக்கு மா விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 29

குடா நாட்டில் பாணுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து யாழ். செயலகத்தின் கையிருப்பில் இருந்து போதியளவு மா பேக்கரிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாக மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.

குடாநாட்டில் தொடர்ந்து பெய்த மழை காரணமாக மக்கள் பாணை உணவுக்காக அதிகம் கொள்வனவு செய்து வருகின்றனர். இதனால் பாணுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் —

அதேசமயம் வெளிச் சந்தைகளிலும் மாவுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது) (உ-5)

கருத்துச்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்தப்படலாம் — என்றும் அவர் சொன்னார்.

இதே போன்ற கருத்தை நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவும் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு யுத்தம், தென் மாகாண மற்றும் மத்திய மாகாணசபைகளில் உள்ள சிக்கல்கள் ஆகியவை மக்கள் போராட்டமாக மாறிவிடுவதைத் தவிர்க்கும் நோக்குடன் அரசு இந்த விதிகளைப் பயன்படுத்துகிறது — என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (உ-6)

நத்தார்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யான் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

வைகுந்த ஏகாதசி திருவிழா நடைபெறுவது குறித்து ஆலய நிர்வாகத்தினர் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவினூடாகப் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்திருந்தனர். செஞ்சிலுவைச் சங்க வலிமேற்கு தொண்டர்களும் ஆலயத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். (அ)

கடத்தப்பட்ட---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு உள்ளது. அது தனக்கு சாதகமான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்த கடைசி வேளையில் —

சபையின் உப தலைவர் திடீரென எதிரணிக்கு ஆதரவளிக்க முடிவு செய்ததால் தலைவர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை வேறு காரணம் காட்டி நிராகரிக்க வேண்டிய சூழ்நிலை உருவானது.

தென் மாகாண சபையிலோ, அரசு தரப்பினாலும் சரி, எதிரணியினாலும் சரி தாம் நினைத்ததை சாதிக்க முடியவில்லை.

அதனாலேயே அரசாங்கம் சிக்கலை தற்காலிகமாக ஒத்திவைக்கும் பொருட்டு, சபையை இம்மாதம் 30 ஆம் திகதி வரை ஒத்தி வைத்துள்ளது

இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வரவு — செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாது விட்டால் தென் மாகாண சபை பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும் வகுத்த திட்டங்களை சபை செயற்படுத்த முடியாதிருக்கும்.

மொத்தத்தில் மாகாண சபையின் நிர்வாகம் ஸ்தம்பிக்கும்.

இப்படியொரு நிலை ஏற்படும்போது அது அரசுக்கு வெற்றியாகவே முடியும். இதனை மனதில் வைத்தே சபை ஒத்திவைக்கப்பட்டது — என்றார். (அ-3-6)

ஊவா---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்தால் 16 வாக்குகளே கிடைக்க முடியும்.

அரசுக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கை சரிசமமாக வரும்போது மட்டுமே சபைத் தலைவர் வாக்களிக்க முடியும்.

எனவே தற்போதைய சூழ்நிலையில் இ தொ.காவின் மூன்று உறுப்பினர்களும் எதிரணிக்கு ஆதரவு வழங்கினால் —

ஊவா மாகாணசபை முதல்வருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒரு வாக்கினால் வெற்றி பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. (உ-6)

தொண்டா---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதாகவும் கூறப்படுகிறது.

இ.தொ காவின் இரண்டாவது உயர் தலைவரான செல்லச்சாமியைப் பயன்படுத்தி இ.தொ. காவை இரண்டாகப் பிளவுபட செய்வது அரசின் தந்திரோபாயமாக உள்ளது.

செல்லச்சாமிக்கு கொழும்பில் தமிழ்மக்கள் வசிக்கும் சில இடங்களில் செல்வாக்கு இருப்பினும் —

தோட்டத் தொழிலாளர் மத்தியில் பாரிய செல்வாக்கு இருப்பதாகத் தென்படவில்லை என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது. (உ-6)

பாதுகாப்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் பேரனார் குழந்தை படுகொலைச் சம்பவத்தின் போது வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்றும் —

பேர்த்தி, மாமியார், சிறிய தகப்பனார் ஆகியோர் இந்திய அமைதிப் படையின் ஷெல் குண்டுக்கு இரையாகி மரணமானவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிரணி --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபையின் நிர்வாகத்தையும், ஏனைய அதிகாரங்களையும் அரசிடமோ அல்லது வேறு சபையிடமோ ஒப்படைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. இந்த விதியைப் பயன்படுத்தி அரசு எதிர்வரும் நாட்களில் தென் மாகாண சபையினதும் மத்திய மாகாண சபையினதும் ஆட்சியை தனது பொறுப்பில் ஏற்றுக் கொள்ளும் என்று கருதப்படுகிறது. (உ-6)


## தவறுக்கு வருந்துகிறேன்

புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது கொழும்பில் வசிப்பவருமாகிய,

டாக்டர் வே. கிருஷ்ணராசா

கொழும்பில் காலமானார் என்று என்னால் வழங்கப்பட்டு 11-11-93 ஆம் திகதி உதயனில் வெளிவந்த மரண அறிவித்தல் தவறானது என்பதை மிகவும் மனவருத்தத்துடன் அறியத்தருகிறேன். டாக்டர் கிருஷ்ணராசா கொழும்பில் நற்சுகமே இருக்கிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல்:
ஆ ந. இராமச்சந்திரன்
மாவட்ட நீதிபதி
சாவகச்சேரி.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(28604)



## வெற்றிடங்கள்

தொடங்கப்படவுள்ள நிதி நிறுவனமொன்றிற்கு அமர்த்தப்படுவதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து கீழ்க் காணும் தொழில் நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொழில் நிலைகள் —

(1) முகாமையாளர்
(2) அலுவலர்
(3) எழுதுநர்

விண்ணப்ப முடிவு நாள்: **05-01-1994**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

ஈழநாதம் மே/பா,
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்

குறிப்பு: கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தொழில் நிலையின் பெயரையும், விளம்பர இலக்கத்தையும் குறிப்பிடவும்.

(சி-6769)



விழாக் காலங்களில்
பஞ்சாமிர்தம் தயார் செய்ய

## பலாப்பழம் கிடைக்கவில்லையா?

அல்லது

## விலை அதிகமா?

கவலையை விடுங்கள்

இன்றே ரேஸ்ரி அளிக்கும்

## பலாப்பழ அமிர்தம்

உங்கள் தேவையை பூர்த்தி செய்கிறது.
முற்றிலும் தூய்மையாக்கப்பட்டது.

**TASTE LINE INDUSTRIES (PVT) LTD.,**
14, SEENIER LANE, JAFFNA.

(28568)



## புனித கல்விப் பயணம்:

**A/L 1993** பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்: **01 - 01 - 94**

★ மாணவர்களின் கட்புலன், செவிப்புலனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர் தொகை 60 ற்கு கூடாதவாறு கட்டுப்படுத்தப்படும்.
★ மாணவர்கள் தாம் விரும்பிய பாடங்களை விரும்பிய பிரிவில் கற்கலாம்.
★ ஒவ்வொரு மாதமும் அனைத்துப் பாடங்களுக்கும் பயிற்சிப் பரீட்சைகள் அதற்கான விளக்கங்கள் அளிக்கப்படும்.
★ கற்கும் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திக்க மேலதிக நேரம் ஒதுக்கப்படும்.
★ ஒவ்வொரு பாடமும் வாரத்தில் 3 மணித்தியாலங்களுக்கு குறையாமல் கற்பிக்கப்படும்.

எமது ஆசிரியர் குழு

CHEMISTRY — திரு D. சிவசோதி
BOTANY — திரு சிவவீரசிங்கம்
ZOOLOGY — திரு. அல்போண்ஸ்
PHYSICS — திரு. மணியம்
PURE MATHS — திரு. முருகையா
APPLIED MATHS — திரு. முருகையா

நேர அட்டவணையை பதிவாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(28598)



எம்மிடம்

## அரிசி ஆலைக்குத் தேவையான

O ஷெனா றபர் றோலர் O ஷெனா பொலிஸ்சா சல்லடை O NO 1 அல்லர் கத்தி
மற்றும் O பெயின்ற் வகைகள் O வாள் பிளேட்
O நோலிக் O பிலிம் றோல் O வீடியோ, ஓடியோ கசற்

வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

## எஸ். வி. முருகேசு

இல. 158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[28588]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org